Registered as a Newspaper

மாநகரசட்சி மன்றம்
யாழ்ப்பாணம்


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2029 கார்த்திகை 22 செவ்வாய்க்கிழமை (08-12-1998) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:10


# வன்னியில் விதிக்கப்பட்ட நிவாரண வெட்டு தளரும்?

## மூன்று மாதங்களுக்கு மட்டும் மீண்டும் வழங்க முடிவு

வவுனியா, டிசெம்பர் 8

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் தங்கியுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டு பின்னர் இடை நிறுத்தப்பட்ட உலர் உணவு நிவாரணத்தை மீண்டும் வழங்குவதற்கு அரச உயர் மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறிய வருகின்றது.

அடுத்த மூன்று மாத காலத்துக்கு இந்த நிவாரணம் வழங்கப்படும் என்று சில வட்டாரங்கள் தெரிவித்தன.

புனர்வாழ்வு அமைச்சின் உயரதிகாரி ஒருவர் உடனடியாக இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்துக்குச்சென்றுநிலைமைகளை நேரில் ஆராய்வார் என்றும்—

யாழ். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வன்னியில் தங்கியிருக்கும் மக்களின் எண்ணிக்கையினை அறிந்து கொண்ட பின்னர் அவர்களுக்கு உலர்உணவு. நிவாரணம் விநியோகிப்பதற்கான அனுமதி வழங்கப்படும் என்றும்—

டிசெம்பர், ஜனவரி, பெப்ரவரி ஆகிய மாதங்களுக்கு மட்டுமே நிவாரண விநியோகம் இடம்பெறும் என்றும்—

இடம்பெயர்ந்த குடாநாட்டு அகதிகளை பெப்ரவரி முடிவதற்கு முன்பாக அவரவர் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கையை சம்பந்தப்பட்ட மாவட்ட அரச அதிபர்கள் மேற்கொள்ள வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் விபத்தில் 10பேர் காயம்

கண்டி—அம்பாறை வீதியில் பஸ் ஒன்று பாரம் தூக்கும் வாகனத்துடன் மோதியதில் அதில் பயணம்செய்த 10 பேர் படுகாயமடைந்து அம்பாறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வேகமாக வந்த பஸ் பாரம் தூக்கி வாகனம்மீது மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

## சாவகச்சேரிப் பகுதியில் இரு தம்பதியர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 8

சாவகச்சேரியில் இரு தம்பதியர் கடந்த சனியன்று படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பெரிய அரசடியைச் சேர்ந்த வீரகத்தி பொன்னையா (வயது 58), இவரது மனைவி பொன்னையா இராசம்மா (வயது 50) ஆகியோரும், சுந்தரம் ஜீவா (வயது 35), இவரது மனைவி ஜீவா ராஜினி (வயது 32) ஆகியோருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் தற்பொழுது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் கைது தொடர்பாக உறவினரிடம் 'ரிசீற்' வழங்கப்பட்டுள்ளது.

இத்தவேளை—

உரும்பிராயில் பேக்கரியொன்றில் வேலைசெய்யும் இளைஞர் ஒருவரும் கடந்த 2 ஆம் திகதி படையினரால்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### பட்டினிக் கொடுமையால்

## மடு அகதி முகாமில் குடும்பஸ்தர் தற்கொலை

கொழும்பு, டிசெ. 8

மடு அகதி முகாமில் பிள்ளைகளின் பட்டினி நிலையைக் கண்டு சகிக்க முடியாமல் மனமுடைந்த குடும்பஸ்தர் ஒருவர் தனது உடலில் மண்எண்ணெய் ஊற்றித்தீ மூட்டி தற்கொலை புரிந்துள்ளார்.

கடந்த புதனன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் குமரேசு யோகராசா (வயது 36) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இவர் கடந்த மூன்று ஆண்டுகளாக இடம்பெயர்ந்து பல இடங்களில் வசித்து வந்தார் என்றும்—

கடைசியாக மடு அகதி முகாமில் தனது குடும்பத்துடன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தலில் போட்டியிட

## பிரதி அமைச்சரும் 2 எம்.பிக்களும் ராஜினாமா

கொழும்பு, டிசெ. 8

நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தலில் வடமேல் மாகாணசபைக்குப் போட்டியிடுவதற்காக பிரதி அமைச்சர் ஒருவரும் இரண்டு எம்.பிக்களும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர்.

சுதேச வைத்தியத்துறை பிரதி அமைச்சர் எஸ். வி. நாவின்ன தமது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட உள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டுசுட்டானை அண்டிய பகுதிகள் மீது ஷெல்வீச்சு!

வவுனியா, டிசெ. 8

ஒட்டுசுட்டான் நகரப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் அங்கிருந்து தொடர்ந்தும் ஷெல் தாக்குதல்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஷெல் வீச்சுக்கு அஞ்சி ஒட்டுசுட்டானை அண்டியபகுதிகளில் இருந்து மக்கள் முழுவதுமாக வெளியேறிவிட்டதால் அப்பகுதிகள் வெறிச்சோடிக்கிடப்பதாக வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

முத்தையன்கட்டு வலதுகரை, இடதுகரை ஆகிய பகுதிகளில் இருந்தும் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். (ஐ-9)

### 'சூரிய சக்தி' இராணுவ நடவடிக்கையால்

## 2 ஆயிரம் ஏக்கர் நெல் வயல் கைவிடப்பட்ட நிலையில்

வவுனியா, டிசெ. 8

ஒட்டுசுட்டான் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து சென்றதை அடுத்து அப்பகுதியில் இரண்டாயிரம் ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்திலேயே அதிக அளவு நிலப் பரப்பில் நெல் பயிரிடப்பட்டிருந்ததாகவும், சில தினங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட 'சூரிய சக்தி' இராணுவ நடவடிக்கையினை அடுத்து அந்தப் பிரதேசத்திலுள்ள மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்து சென்றுள்ள நிலையில் பயிர்கள் போதிய பராமரிப்பு இன்றி அழிந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதியிலுள்ள நெற்பயிர்கள் அழிவுற்றால் அடுத்த ஆண்டு முல்லை மாவட்டத்தில் அரிசிக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலை இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

### வேட்புமனு தாக்கலுக்கு பின்

## அரச, எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் மோதல்!

கொழும்பு, டிசெ. 8

புத்தளம் மாவட்டம் மாதம்ப என்னும் இடத்தில் நேற்று நண்பகல் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கும், அரச ஆதரவாளர்களுக்கும் இடையே கோஷ்டி மோதல் இடம்பெற்றது,

வடமேல் மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை புத்தளம் மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்யச் சென்றுவிட்டுத் திரும்பி வரும் வழியிலேயே இருதரப்பு ஆதரவாளர்களும் மாதம்ப பகுதியில் மோதிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதலில் துப்பாக்கிகளும், கைக்குண்டுகளும் பயன்படுத்தப்பட்டதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இம் மோதலில் ஐவர் காயமடைந்ததாகவும், ஐந்துபேர் வரை கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 400 கிலோ வெடிமருந்து மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 8

பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து கடந்த ஞாயிறன்று அளவெட்டிப் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் விடுதலைப் புலிகளின் மறைவிடம் ஒன்றில் இருந்து வெடிமருந்து மற்றும் வெடிக்கவைக்கும் சாதனங்களைக் கைப்பற்றியதாக பலாலி பாதுகாப்பு தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சக்திவாய்ந்த 400 கிலோ வெடிமருந்து மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### தலை நகரில்

## மாடிக் கட்டடங்களை பாதுகாக்க ஏற்பாடு!

கொழும்பு, டிசெ. 8

கொழும்பிலுள்ள உயர் மாடிக் கட்டடங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் நோக்கில் இராணுவக்குழு ஒன்றுக்கு விசேட பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

கொழும்பிலுள்ள உயர் மாடிக் கட்டடங்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தக் கூடிய ஆபத்து இருப்பதாகவும், அதனை முறியடிக்கும் நோக்கில் தலைநகரிலுள்ள உயர் மாடிக் கட்டடங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை—

வாகனத் தரிப்பிடங்களில் அதிகநேரம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரின் பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரியாக மேஜர் ஜெனரல் சத்தீஸ் ஜெயசுந்தர நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (ஐ-9-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BOSCO INSTITUTE

25, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

ஆண்டு 6, 7, 8 & O/L

கணிதம்:- விக்கி

புலமைப் பரிசில் - 99

புதிய பிரிவு ஆரம்பம்:- 10 - 12 - 98
மாலை 3-00 மணி.

அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

(61190)


## ராதாவுக்கு கண்ணீர் அஞ்சலி

நவாலியூர்

**தேவா சுலோசனா**

(ராதா அக்கா)

06-12-1998 இல் இறைவனடி சேர்ந்தார்.

ஓம் சாந்தி!

ந. சாம்பசிவம்,
நவாலி வடக்கு.

புலவர் வீதி,
நவாலி.

(சி/5746)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுலோசனா தேவா

(ராதா அக்கா)

நவாலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சுலோசனா தேவா 6-12-98 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் நாகரெட்ணம் தேவாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பஞ்சாட்சரம் — பர்வதவர்த்தினி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற நாகரெட்ணம் தம்பதிகளின் மருமகளும், சுரேஸ்குமார், சுரேஜினிதேவி (கணக்காளர், பிரதேச செயலகம், வவுனியா தெற்கு), சுபாஜினி (கொழும்பு பல்கலைக் கழகம்), சதீஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், பவளகாந்தன் (மட்டக்களப்பு), தனலட்சுமி, ரஞ்சிததேவி (மட்டக்களப்பு), பிரேமச்சந்திரன் (அலங்கார் ரெக்ஸ், யாழ்.) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு கல்கிசை 591, மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 9-12-98 நாளை புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு இறுதிக் கிரியைகளுக்காக கல்கிசை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
**தே. சதீஸ்**
(மகன்)

''சுலோ பவனம்''
நவாலி வடக்கு, மானிப்பாய்.

(61186)

## திருமதி பூரணலட்சுமி சிவபாதசுந்தரம்

(இன்பர்சிட்டி)

பருத்தித்துறை ஐயனார் வீதியைப் பிறப்பிடமாகவும் இன்பர்சிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாதசுந்தரம் பூரணலட்சுமி அவர்கள் (30-11-98) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாதசுந்தரத்தின் (இளைப்பாறிய அதிபர், மேலைப்புலோலி, சைவப் பிரகாச வித்தியாசாலை) அன்பு மனைவியும், நளினசுந்தரி (லண்டன்), சிவபாலன் (நோர்வே), நந்தினி (யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம்), பாமினி சுகந்தினி, பூபாலன் ஆகியோரின் அன்புத்தாயாரும், விஜயகுமார் (லண்டன்), றஜனி (நோர்வே), கேதீஸ்வரன் (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமியாரும், லக்சிகா, விதுஷன், திவ்விகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 1-12 – 98 செவ்வாய்க் கிழமை புதுக்குடியிருப்பு மாத்தளன் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**பொன்னுத்தம்பி கேதீஸ்வரன்**
(மருமகன்)
யாழ். பல்கலைக்கழகம், கலைப்பீடம்-
இறுதிவருடம் பொருளியல் (சிறப்பு)

ஐயனார் வீதி, பருத்தித்துறை.

(61188)

## திருமதி தங்கம்மா ஐயாமுத்து

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா ஐயாமுத்து 06- 12- 1998 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்றஐயாமுத்துவின் அன்புமனைவியும் இந்திராணி, சிவராசா (ஆசிரியர்) ஆகியோரின் தாயாரும் திருமதி ஸ்ரீஜெனனியின் (ஆசிரியை, யாழ் அத்தியார் இந்துக் கல்லூரி) மாமியாரும், கௌதமன், நாராயணி, தாட்சாயணி, பவதாரணி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07- 12- 98 திங்கட் கிழமை கோப்பாயில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ஐ. சிவராசா** (மகன்)

ஸ்ரீ றஞ்ஜனி வாசா,
கோப்பாய் வடக்கு. கோப்பாய்.

(61166)


## A\L Day Class

பிரத்தியேக வகுப்பு

துரித மீட்டல்

( முழுப்பாடத் திட்டமும் )

அலகு ரீதியாகச் சுருக்கக் குறிப்புகளுடன்

ஆரம்பம்:- 10 – 12 - 98
வியாழன் 10 மணி

பௌதிகவியல்
Mr . விஜயகுமாரன்

தூய /
பிரயோக கணிதம்
Mr. அம்பிகைபாகன்

★ மாணவரின் வசதி அறிந்து தேவை ஏற்படின் நேர மாற்றம் செய்யப்படும்.

இடம்:

**பொருளியற் கல்லூரி**

நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

(61182)

## ஸ்ரீ செல்வா

சினிமா

ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

தினசரி:- 10-30, 2-30
( பழைய நேரம் )

முரளி, ரம்பா, நாசர்
நடித்த

தேசியகீதம்
(புதிய வெளியீடு)

(61189)

## நாகம்ஸ்

சினிமா

சுன்னாகம்.

30 அடி அகலத் திரையில்

சரத்குமார், குஷ்பு
நடித்த

சிம்மராசி
(புதிய வெளியீடு)

காட்சிகள் - 10.30-2.30

11 ஆம் திகதி முதல்
மீண்டும் கூட்டுத்தாபன
ரீல்ஸ் வெளியீடு!
குதூகல ஆரம்பம்

காதல் கோட்டை

(61187)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

ரஜனி, மீனா, ரோஜா
ஜனகராஜ், செந்தில்
நடித்த

வீரா

தினசரி
10-30, 2-00, 5-00

(சி/5711)

## லிபேட்டி

தியேட்டர்

அச்சுவேலி.

இன்று மட்டும்

லிவிங்ஸ்டன் - கௌசல்யா
நடித்த

சொல்லாமலே
( புதிய வெளியீடு )

அடுத்த வெளியீடு!

சிம்மராசி

தினசரி: 10-30, 2-30
( பழைய நேரம் )

தொலைபேசி:
070 212223

(61071)


## கண்ணீர் அஞ்சலி

எமது கழக ஆசிரியை

திருமதி கேதாரபூரணி ஞானகாந்தன்

அவர்களின் அன்பு மாமனார்

**பொன்னர் வேலாயுதபிள்ளை**

அவர்கள்

05. 12. 98 இல் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியைகளும் கழக உறுப்பினர்களும்
யாழ். பாலர் கல்விக் கழகம்

(சி/5747)

உ

சிவமயம்

''மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்''

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தமிழ்க்கலாசார மறுமலர்ச்சியின் தந்தையும்
ஐந்தாம் சமயகுரவருமான

நல்லை

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்**

அவர்களின்

## குருபூசைத் தினவிழா

**09-12-1998**

சிவனருட் செல்வர்களே!

நிகழும் வெகுதானிய வருடம் கார்த்திகை மாதம் 23 ஆம் திகதி (09-12-1998) புதன்கிழமை அன்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசைத் தினமாகும். இத்தினத்தன்று காலை 7.00 மணியளவில் (இலங்கை நேரம்) ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் எம்பெருமானுக்கு ருத்திரா அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து காலை 8.00 மணிக்கு விசேட பூசையும் நிகழவுள்ளன. இதனைத் தொடர்ந்து இக்குரு பூசைத் தினத்தின் விசேட நிகழ்ச்சிகளாக ஆலய மண்டபத்தில் பின்வருவன இடம்பெறவுள்ளன.

1) பண்ணிசை — இந்துநாகரிக சிறப்புக்கலை மாணவிகள்

2) தலைமையுரை — தலைவர், இந்து மன்றம், யாழ். பல்கலைக்கழகம்

3) சிறப்புச் சொற்பொழிவு — பேராசிரியர் கலாநிதி **அ.** சண்முகதாஸ் அவர்கள் கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்.

விடயம் — 'நாவலரை நாம் ஏன் நினைக்கிறோம்?'

4) நன்றியுரை — செயலாளர், இந்து மன்றம், யாழ். பல்கலைக்கழகம்.

அனைவரையும் இவ்வைபவங்களில் பங்குகொண்டு எம்பெருமானின் திருவருளுக்குப் பாத்திரராகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்து மன்றம்
**யாழ். பல்கலைக்கழகம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

(61184)

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

## விசேட பொதுக் கூட்ட அறிவித்தல்

1998 டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு (புதிய நேரம்) ஜும்மாப் பள்ளிவாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள 'சிற்றி ஹோல் மண்டபத்தில்' கீழ்க்காணும் விடயங்கள் பற்றி ஆராய்ந்து தீர்மானம் எடுப்பதற்கான விசேட பொதுக் கூட்டம் நடைபெறும்.

1. யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தை ''சேம்பர் ஒவ் கொமேஸ் அன்ட் இன்டஸ்றீஸ் ஒவ் யாழ்ப்பாணம்'' என்னும் பெயரில் கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கான யாப்பு பிரபல சட்டத்தரணியால் தயாரிக்கப்பட்டதனை ஆராய்ந்து அங்கீகரித்தல்.
2. ''அஸ்ரோறியா, பிறின்சஸ் காஷ்'' கப்பல்களில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தொடர்பாக மேற்கொண்டு எடுக்கப்படும் நடவடிக்கை பற்றி ஆராய்தல்.
3. 1995 இன் இடம் பெயர்வினால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு நஷ்டஈடு, இலகுகடன் ஆகியவை புனர்வாழ்வு அமைச்சினால் வழங்குவது தொடர்பான விளக்கவுரை.

யாழ்ப்பாண வணிகர் கழக அங்கத்தவர்கள் யாவரையும் இக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.**

இல. 27, நவீன சந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம். 05. 12. 1998.

(சி/5745)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
யாழ்ப்பாணம்

# பாபர் மசூதி தகர்ப்பு நினைவு நாள் அசம்பாவிதம் இன்றிக் கழிந்தது

## தமிழகத்தில் மட்டும் 6,000 பேர் கைது

புதுடில்லி, டிசெ. 8

இந்தியாவின் உத்திரப்பிரதேசத்திலுள்ள அயோத்தி நகரில் அமைந்திருந்த பாபர் மசூதி இந்து தீவிரவாதிகளால் தாக்கி அழிக்கப்பட்ட 6 ஆவது ஆண்டு நிறைவு நாள் நேற்று முன்தினம் அசம்பாவிதம் இன்றிக் கழிந்தது.

நிறைவு நாளை முன்னிட்டு இந்தியாவின் பல மாநிலங்களிலும் படையினர் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தது டன் சந்தேகத்துக்கு இடமான பலநூற்றுக்கணக்கானவர்கள் பாதுகாப்புக் கருதி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்து தீவிரவாதிகளும், ஆதரவாளர்களும் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டபோதும் எந்த வித அசம்பாவிதங்களும் இடம் பெறவில்லை,

மசூதி இடிக்கப்பட்ட இடமான அயோத்தியிலும் எந்த வித அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை என மாவட்ட நீதிபதியொருவர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சுமார் 6 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டதுடன் கோயம்புத்தூரில் 4 ஆயிரம் பாதுகாப்புப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

கோயம்புத்தூர் நகரில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எல். கே. அத்வானி பேச இருந்த மேடைக்கு அருகே தொடர்ச்சியாக இடம் பெற்ற குண்டு வெடிப்புக்களால் 60 பேர் வரை உயிரிழந்தமை தெரிந்ததே.

இதற்கு முஸ்லீம் தீவிரவாத அமைப்புக்களே காரணம் என்று பொலீஸார் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

(இ – 6 – 10)

## இன்னும் 30 ஆண்டுகளில் ஆசியாவில் அரிசிப் பஞ்சம்

பாங்கொக், டிசெ. 8

அடுத்த மூன்று தசாப்தங்களில் ஆசியாக் கண்டத்தில் நெல் உற்பத்தி பாதிக்கப்படலாம்.

இவ்வாறு சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையமும் ஆசிய அரிசி நிறுவனமும் இணைந்து நடத்திய மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

அடுத்த மூன்று தசாப்த காலத்தில் அரிசி நுகர்வு 70 சதவீதமாக அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதே சமயம் பயிர்ச் செய்கைக்கான நிலம், நீர் என்பவற்றின் பற்றாக்குறை காரணமாக நெல் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படலாம்

உலக அரிசி நுகர்வில் 90 சதவீதமான அரிசி ஆசிய நாடுகளிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது.

அடுத்த 25 ஆண்டுகளுக்குள் மேலதிகமாக 104 கோடி மக்களின் அரிசித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஆண்டொன்றுக்கு ஒரு கோடி தொன் அரிசி உற்பத்தி செய்யப்படவேண்டிய நிலை உருவாகும்.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியா, தாய்லாந்து, கம்போடியா, இந்தோனேசியா, சீனா போன்ற நாடுகள் ஒன்றிணைந்துபுதிய தொழில்நுட்பங்களையும் புதிய தந்திரோபாயங்களையும் உருவாக்க வேண்டும்.

இப்படி அந்த மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-6-10)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
பகுதி D
**கருத்தரங்குத் தொடர்**

**இடம்:** புவியியல் துறை மண்டபம்
**தலைவர்:** பேராசிரியர் அ. சண்முகதாஸ்
**காலம்:** 09 - 12 - 1998 3 மணி
**பொருள்:** கடல் வலயத்தடையும் மீனவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்

கருத்துரை வழங்குபவர்:
திரு. A. S. சூசை
(விரிவுரையாளர், புவியியல் துறை)

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர் பகுதி D
(61178) யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



தோற்றம் 04 – 08 – 1922
மறைவு 08 – 11 – 1998

திருமதி
**கனகம்மா இராமப்பிள்ளை**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
இ. பாலசிங்கம் (மகன்).
சி. சிவசேகர் (பேரன்).

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி.
(61177)

## ஐ. நா. படையினர் 14 பேர் அங்கோலாவில் விடுவிப்பு

றுவாண்டா, டிசெ. 8

கடந்த ஒரு மாத காலமாக அங்கோலாவின் யூனிட்டா கிளர்ச்சிப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐ. நா. சமாதானப் படையினர் 14 பேர் நேற்று முன் தினம் விடுவிக்கப்பட்டனர்,

இவர்களில் 10 பேர் இந்தியவீரர்களாவர். விடுவிக்கப்பட்ட வீரர்கள் றுவாண்டாவிலுள்ள ஐ.நா சமாதானப் படையின் அலுவலகத்துக்கு போய்ச் சேர்ந்து விட்டார்கள் என்று ஐ. நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-6)

## கைதிகள் விடுதலை கோரி பலஸ்தீனர் போராட்டம்

ஜெருசலேசம், டிசெ. 8

இஸ்ரேலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பலஸ்தீனக் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் எனக் கோரி ஆயிரக் கணக்கான பலஸ்தீனர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவருகின்றனர்.

சமாதான உடன்படிக்கையின் ஒரு பகுதியாக அரசியல் கைதிகளையும் இஸ்ரேல் விடுவிக்க வேண்டும் என அவர்கள் கோரிவருகின்றனர்.

வைநதி சமாதான உடன் படிக்கையின் அடிப்படையில் இஸ்ரேல் இதுவரை சிறிய கிரிமினல் குற்றங்கள் புரிந்த பலஸ்தீனக் கைதிகளை மட்டுமே விடுதலை செய்திருந்தது.

கிரிமினல் கைதிகளை மட்டுமன்றி சில அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதாக உடன்படிக்கையில் இஸ்ரேல் தெரிவித்திருந்தது என்று பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் தெரிவித்துள்ளார்.

## கார்ச் சாரதியின் குற்றச்சாட்டு பொய் என்கிறார் அன்வரின் மனைவி!

கோலாலம்பூர், டிசெ.8

ஆறு வருடங்களுக்கு முன்னர் அன்வர் இப்ராஹிம் தன்னை தன்னினச் சேர்க்கைக்கு உட்படுத்தியதாக அன்வரின் முன்னாள் கார்ச் சாரதி தெரிவித்திருப்பதை அன்வரின் மனைவி வான் அசிஸாவான் இஸ்மாயில் பொய் என்று மறுத்துள்ளார்.

அன்வர் தன்னை தன்னினச் சேர்க்கைக்கு உட்படுத்தியது குறித்து தெரிவித்த முன்னாள் கார்ச்சாரதி அன்வரை ''மிருகம்'' என்று வர்ணித்திருந்தார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு கடந்த சனிக்கிழமை வழங்கிய பேட்டி ஒன்றில் அன்வரின் மனைவி மேலும் தெரிவித்ததாவது:-

**உலக அரங்கில்**

எனது கணவர் மீது கூறப்படும் இவ்வாறான அவதூறுகளைக் கேட்கும் போது எனக்கு சற்று மனக்கஷ்டமாக இருக்கின்றது.

இவற்றையெல்லாம் எனது கணவர் வெறுமனே இருந்து கேட்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளார்.

நாட்டில் முன்னர் சக்தி வாய்ந்த ஒருவராகக் கருதப்பட்ட அன்வர் தற்போது ஒரு துறவி போலவே வாழ்கிறார்.

அவர் சிறையில் தனிமையில் வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு தொழுவதற்குக்கூட எவ்வித வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை.

ஒரு வானொலிப் பெட்டியை அவருக்கு வழங்குமாறு நாம் விடுத்த வேண்டுகோளையும் அவர்கள் நிராகரித்து விட்டார்கள்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-6)

## கடைசி கெமர்ரூச் படையினரும் கம்போடியாவில்

கம்போடியாவில் எஞ்சியிருந்த கடைசி கெமர்ரூச் கெரில்லாக்களும் கம்போடிய அரசாங்கத்திடம் சரணடைந்து விட்டனர் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

வட கம்போடியாவில் உள்ள ஆலயம் ஒன்றில் எட்டு கெமர்ரூச் கெரில்லாத் தலைவர்களுடனும் அவர்களது உறுப்பினர்களுடனும் இராணுவ அதிகாரிகள் பேச்சுக்கள் நடத்தினார்கள். இதனை அடுத்தே அவர்கள் அனைவரும் சரணடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சரணடைந்த மேற்படி கெமர்ரூச் உறுப்பினர்களே அந்த இயக்கத்தின் கடைசி அங்கத்தவர்கள். இத்துடன் கெமர்ரூச் இயக்கத்தின் அத்தியாயம் முடிவடைந்து விட்டது என்று இராணுவ ஜெனரல் ஒருவர் தெரிவித்தார்.

(இ-6)

## கோபாலசாமி கோரிக்கை

புதுடில்லி, டிசெ.8

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கும்படி இந்தியாவின் ஆளும் கூட்டணி அரசாங்கத்தில் அங்கம் வசிக்கும் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை. கோபாலசாமி இந்திய அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ராஜீவ் காந்தியின் கொலையில் சம்பந்தப்பட்ட சிலர் புலிகள் என்பதற்காக அந்த இயக்கத்தைத் தடைசெய்ய வேண்டியதில்லை, புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டுமென்றும் [illegible] அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார். (இ-8)

## அதிசக்தி வாய்ந்த பாகிஸ்தானின் ஏவுகணை:

இஸ்லாமாபாத், டிசெ 8

இந்தியத் துணைக் கண்டத்திலேயே அதி நவீனமான ஏவுகணையான 'ஷஹீன்' ஏவுகணையை பாகிஸ்தான் தயாரித்துள்ளது.

இதனை சோதனை செய்து பார்ப்பதற்கான அரசாங்கத்தின் அனுமதியை எதிர்பார்த்திருக்கின்றோம்.

இப்படி பாகிஸ்தானின் ஏவுகணைத் திட்டத் தலைவர் சமர் முபாரக்மாண்ட் தெரிவித்தார்.

759 கிலோ மீற்றர் தூரத்துக்கு அணு ஆயுதம் உட்பட அனைத்து விதமான வெடிப் பொருள்களையும் காவிச் சென்று குறிப்பிட்ட இலக்கைத் துல்லியமாகத் தாக்கும் திறன் படைத்தது இந்த ஏவுகணை.

இந்தியாவின் பிருதுவி ஏவுகணையை விட மூன்று மடங்கு அதிக சக்தி வாய்ந்தது இது என்றும் சமர் முபாரக்மாண்ட் தெரிவித்தார்.

இந்த ஏவுகணையின் தரைச் சோதனை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு விட்டது எனினும் முறையான சோதனைக்காக அரசாங்கத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

(இ-10-6)

## பிரான்ஸில் விழிப்புணர்வுப் போராட்டம்

பாரிஸ், டிசெ. 8

இலங்கையில் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதி மக்கள் மீது அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வரும் நிவாரண வெட்டைக் கண்டித்து பிரான்ஸில் கடந்த சனிக்கிழமை விழிப்புணர்வுப் போராட்டம் நடத்தப்பட்டது.

பிரான்ஸ் தமிழ் மனித உரிமை அமைப்பு மையம் ஏற்பாடு செய்த இந்தப் போராட்டத்தில் நூற்றுக் கணக்காக மக்கள் கலந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா அரசின் செயற்பாடுகளைக் கண்டிக்கும் வகையில் பதாகைகளை அவர்கள் தாங்கியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பினர். (இ-3-6)

## அமெரிக்கசெயற்கைகோள்

கோள்களையும் நட்சத்திரங்களையும் ஆய்வு செய்யும் திட்டத்தின் முதற்கட்டமாக 'நாசா' விண்வெளி ஆய்வு நிலையம் செயற்கைக் கோள் ஒன்றை நேற்று முன் தினம் விண்ணில் ஏவியது.

கலிபோர்ணியா மாண்டன் பேர்க் விமானப்படைத் தளத்தில் இருந்து இந்த செயற்கைக் கோள் ஏவப்பட்டது.

6 கோடி 40 லட்சம் டொலர் செலவிலான இரண்டாண்டு கால ஆய்வுத் திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாகவே இந்த செயற்கைக் கோள் ஏவப்பட்டுள்ளது என்று 'நாசா' அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த செயற்கைக்கோள் பூமிக்கு உட்பட்ட நூற்றுக் கணக்கான பிராந்தியங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நட்சத்திர வளர்ச்சி பற்றி ஆய்வு செய்யும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

52 வயது மணமகனுக்கு படித்த, அழகிய மணமகள் தேவை. அம்பாள் திருமண சேவை, ஸ்ரீலங்கா அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(61159)

## MATHS CLASS—99

ஆண்டு 6 முதல் O/L வரை உங்கள் வீடுகளுக்கு வந்து கணிதம் கற்பிக்கப்படும். விரிவுரை K. E. சங்கர். உடன் தொடர்பு: 501A, மொகடீன் பள்ளி வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

(61112)

## தவறிவிட்டது

வீரசிங்கம் சுரேஸ்குமார் என்பவரது தேசியஅடையாள அட்டை (இல. 721911101V) விசேட அடையாள அட்டை என்பன 1.12.98 அன்று கோண்டாவில் சந்தியில் இருந்து திருநெல்வேலி பொற்பதி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் N S.T களஞ்சியம், கோண்டாவில் சந்தி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(61150)

## நாடகம்

யாழ். சேவையில் கனவும் நிஜமும் நாடகம் கேட்டீர்களா? உதயனில் பிரசுரமான நாடகக் கட்டுரைக்குப் பொருத்தமாக உள்ளதா? அந்த நாடகம் அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணமா? கொழும்பா? நூலில் உள்ளது. 50/-.

(61168)

## ஒளி விழா

கொழும்புத்துறை, டிசெ.8

யாழ். சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் 'ஒளி விழா' எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். யாகப்பர் ஆலய பங்குத்தந்தை பொனிபஸ் அடிகளும், யாழ். மறைக்கல்வி இயக்குநர் அருட்திரு. நோமன் நேசராசா அடிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-30)

## புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்

ஊர்காவற்றுறை, டிசெ. 8

ஊர்காவற்றுறை புனிதமரியாள் ஆலயம், புனித சூசையப்பர் ஆலயம் ஆகியவற்றின் புனரமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன.

இந்த ஆலயங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபா ஊர்காவற்றுறை பிரதேச செயலரினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ-16)

## நகரில் பதாகைகள்

யாழ்ப்பாணம், டிசெ. 8

கடந்த 3 ஆம் திகதி காலமான ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவரும், உள்நாட்டு, வெளிநாட்டு, வர்த்தக பிரதியமைச்சருமான வை. பி. டி. சில்வாவிற்கு அனுதாபம் தெரிவித்து புளொட் அமைப்பு யாழ். நகரின் முக்கிய சந்திகளில் பதாகைகளைச் கட்டியுள்ளது. (ஐ-7)

## அதிபர் பதவி வெற்றிடம்

செம்பியன்பற்று, டிசெ. 8

வடமராட்சி கிழக்கு குடத்தனை கரையூர் றோ.க.த. கலவன் பாடசாலையிலும் தாளையடி றோ.க. தமிழ்க் கலவன் பாடசாலையிலும் அதிபர் பதவி வெற்றிடமாக உள்ளதாக மருதங்கேணி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. அருளானந்தம் தெரிவித்தார். (இ-36)

---

பருத்தித்துறை,

## நகராட்சி மன்றம்.

## மீன் கேள்வி அறிவித்தல் – 1999

பருத்தித்துறை நகராட்சி மன்றப் பழைய மீன் சந்தையில் அமைந்துள்ள மாட்டிறைச்சிக் கடைக்கான மீன் கேள்விகள் 01-01-1999 ஆம் திகதி தொடக்கம் 31-12-1999 வரையிலான காலப்பகுதிக்குக் கோரப்படுகின்றன.

01. கேள்விப்படிவக் கட்டணம் ரூபா 150, கேள்வி வைப்புப்பணம் ரூபா 1,500.
02. கேள்விப்பத்திர விநியோகம் 15 - 12 - 1998 ஆம் திகதி பி. ப. 3. 00 மணி வரை.
03. கேள்விப் பத்திரம் ஏற்கும் திகதி 16 - 12 - 1998 நண்பகல் 12.00 மணி வரை.
04. கேள்விப் பத்திரம் திறக்கும் நேரம் 16. 12. 1998 பி. ப. 3. 00 மணி.
05. ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா. 2,00,000

இக் கேள்வி தொடர்பான மேலதிக விவரம் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

வ. விசயரட்ணம்
தலைவர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
04—12—1998

(C/5742)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்களான
திரு ஐ. சிவராசா அவர்களின்
அன்புத் தாயாரும்
திருமதி சி. சிவராசா அவர்களின்
அன்பு மாமியாருமாகிய

### திருமதி ஐயாமுத்து தங்கம்மா

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா / அத்தியார் இந்துக் கல்லூரி,
நீர்வேலி.

(61172)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கணபதிப்பிள்ளை மாணிக்கம்

(ஓய்வுபெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர்)

தோற்றம் 31 — 01 — 1926 மறைவு 19 — 11 — 1997

திதி: 08 — 12 — 1998

ஓராண்டு சென்றதையா...! உன் நினைவு வாட்டுதிங்கே!
தீராது கண்ணிரண்டும் தீர்த்தமாடும் - வாராயோ...
வாசல் திறந்து வைத்தோம் வாழவைத்த தெய்வமே!
பாசப் பரிதவிப்பைப் பார்!

தங்கள் பிரிவால் தவிக்கும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''புளியடி'',
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(61174)

---

# UNICEF

## UNICEF - COLOMBO
## VACANCY NOTICE

TO:
ALL UNICEF / UN Agencies Local Personnel and Temporary Assistants.

FROM:
Moreena Hassim - Operations Officer

POST TITLE:
Asst. Project Officer - Education

CATEGORY:
NO - B

DUTY STATION:
Colombo

DURATION:
Initially for six Months. The Candidate may be given extension for up to two years on fixed term appointment, subject to programme needs, availability of funding and satisfactory performance.

DATE REQUIRED:
01 January 1999

MAJOR DUTIES:

Under the guidance of the Programme Officer, Rights and Sectoral Cluster provide support and be responsible for the formulation, development, implementation, monitoring and evaluation of UNICEF assisted Programme of Co-operation with the Government of Sri Lanka in the field of primary education, both formal and non-formal, and early childhood development, by under taking the following duties:

Contribute towards the collection and analysis for preparation of the Situation Analysis by compiling data, analysing and evaluating information, and drafting chapters relating to primary education, both formal and non-formal education, and early childhood development (ECD). Contribute information that will point to any possible changes in policy or programme direction.

Collaborate with Government and other partners (in particular, the Ministries of Education, at the central and provincial level) for programming at the national level including the estates and conflict areas Participate in development of annual Plan of Action and undertake follow up action in implementation and prepare relevant reports.

Assist in the preparation of Country Programme documentation by drafting project plans, annual reports. APRs, donor project proposals and reports. PTDR requirements, etc. Maintain computerised programme system and submit relevant reports.

Analyse programme implementation reports and evaluate against established programme recommendations and plans of actions. Prepare tables, graphs and other statistical data for information sharing within UNICEF and with outside partners. Report outcome of analysis and propose corrective action.

Undertake follow-up action on programme implementation activities and prepare relevant reports. Attend technical co-operation meetings, prepare notes and undertake follow up action related to programme implementation and monitoring and attend to field travel as and when required.

Provide guidance and support to staff in meeting project objectives and ensure their training needs are met.

Assist in the co-ordination of supply and non-supply assistance to ensure proper and timely delivery and appropriate use of funds. Monitor financial status reports to ensure expenses are within budgeted allotments and approved plans of action.

EDUCATIONAL QUALIFICATIONS:

University Degree related to education and/or early Childhood development. Other qualifications in primary education both formal and non formal systems and early childhood development will be an advantage.

EXPERIENCE:

02 years progressively responsible experience in programme planning, administration, monitoring and evaluation in relevant fields at national level knowledge of computer management and applications, communication, analytical and training skills required.

Internal candidates should submit their applications to the Operations Officer under CONFIDENTIAL COVER by

**21st December 1998, to Jaffna Office, 123/1, Temple Road, Jaffna.**

(C/5741)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறையில் இன்று முதல் தென்னங்கன்றுகள் விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ. 8

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் முதற் கட்டமாக ஆறாயிரம் தென்னங்கன்றுகள் இன்றுமுதல் விநியோகிக்கப்படவிருக்கின்றன.

சனசமூக நிலையங்களில் ஏற்கனவே பதிவு செய்தவர்களுக்குத் தென்னங்கன்றுகள் வழங்கப்படவிருக்கின்றன.

ஊர்காவற்றுறை. நாரந்தனை உப - அலுவலகத்தில் இன்றும்—

காரைநகர் உப - அலுவலகத்தில் நாளையும்—

காரைநகர் தெற்கு உப- அலுவலகத்தில் நாளை மறுதினமும்—

அனலைதீவு உப அலுவலகத்தில் எதிர் வரும் 11 ஆம் திகதியும்—

எழுவைதீவு உப- அலுவலகத்தில் எதிர் வரும் 12 ஆம் திகதியும்- தென்னங்கன்று விநியோகம் இடம்பெறும்.

யாழ். மாவட்ட எம். பியும், ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா பிரதேச சபைக்கு ஒதுக்கிய நிதியில் முதற்கட்டமாக6 ஆயிரம்தென்னங்கன்றுகள் வழங்கப்படுவதாகவும்—

அடுத்த கட்டத்தில் மேலும் ஒரு தொகுதி தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளன என்றும்- ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் மதனராஜன் தெரிவித்தார். (இ-3)

## விரிவுரைகளை தவறவிட்ட மாணவருக்கு விசேட. வகுப்பு

தென்பகுதி சென்று போக்கு வரத்துப் பிரச்சினைகள் காரணமாக விரிவுரைகளைத் தவறவிட்ட மாணவர்களுக்கு விசேட வகுப்புகள் நடத்துவதற்கு பீடாதிபதிகள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் பலர் தென்பகுதி சென்று போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாக யாழ்ப்பாணம் வரமுடியாத நிலையில் இருந்தனர்.

இவர்களில் திருகோணமலையில் தங்கி நின்ற 70 பேர் கடந்த புதன்கிழமை ''லங்கா முடித்த'' கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அழைத்துவரப்பட்டனர்.

இதனையடுத்து இவர்களுக்கு விசேட விரிவுரைகளை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அந்தந்தப் பீடாதிபதிகள் விரிவுரையாளர்களின் ஒத்துழைப்புடன் செய்து வருகின்றனர். (இ-9)

## நெடுந்தீவு உ. அ. அ. பணிமனை மீண்டும் பழைய இடத்தில்

நெடுந்தீவு, டிசெ. 8

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை மீண்டும் அதன் சொந்தக் கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

இந்த ஆண்டு முற்பகுதியில் இடம் பெற்ற உள்ளூராட்சித் தேர்தலையொட்டி நெடுந்தீவுக்கு வருகை தந்த பாதுகாப்புப் படையினர் தமது தேவைக்காக உதவி அரசாங்க அதிபர் பணிமனையைக் கையேற்றதால் உதவி அரசாங்க அதிபர் பணிமனை நெடுந்தீவு பொது நூலகத்திற்குத் தற்காலிகமாக மாற்றப்பட்டிருந்தது.

பாதுகாப்புப் படையினர் நெடுந்தீவில் இருந்து விலகிக் கொண்டதைத் தொடர்ந்து கடந்த வாரம் முதல் தனது சொந்தக் கட்டடத்தில் உதவி அரசாங்க அதிபர் பணிமனை இயங்கத் தொடங்கியுள்ளது. (இ-111)

## நெடுந்தீவில் கிறிஸ்மஸ் விழா

தென் இந்திய திருச்சபையின நயினாதீவு ஆராதனை மண்டபத்தில் பகற் பராமரிப்பு நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கிறிஸ்மஸ் விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

பகற் பராமரிப்பு நிலையத்தின் ஆசிரியை செல்வி குணசீலி அலோசியஸ் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், நெடுந்தீவு தென் இந்திய திருச்சபைக் குரு அருள்திரு என். ரீ. ஜெயநேசன் சிறுவர் பராமரிப்புப் பற்றிய கருத்துரை வழங்கியதுடன் சிறுவர்களுக்கான கிறிஸ்மஸ் பரிசில்களையும் வழங்கினார். [இ-111]

## அடுத்த 22 வருடங்களில் முதியோர் எண்ணிக்கை 5 லட்சமாக உயரும்

கொழும்பு, டிசெ. 8

அடுத்த 22 ஆண்டுகளில் இலங்கையில் 5 லட்சம் முதியவர்கள் இருப்பார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் தற்போதைய சனத்தொகையில் இது 8 சதவீதமாகும்.

இவ்வாறு சமூக சேவைகள் அமைச்சர் பேர்ட்டி பிறேமலால் திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

முதியோர் பிரச்சினை நாட்டின் பொருளாதாரத்தின் மீது பாதகமான விளைவையே ஏற்படுத்தும். எனவே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க இருக்கிறது.

முதியோர் பிரச்சினை தொடர்பாக பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வருங்காலத்தில் பல்வேறு திட்டங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது-

இப்படி அமைச்சர் மேலும் கூறினார். (இ-6)

## வடமராட்சி கிழக்கில் வெள்ளம்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் பெய்துவரும் அடைமழையினால் பல இடங்களில் வெள்ளம் காணப்படுகின்றது.

தொடுவாய்கள் சிலவும் வடமராட்சிகிழக்கில் உடைப்பெடுத்து தண்ணீர் கடலுக்குள் பாய்கிறது.

அதேசமயம் காலபோக நெற்செய்கை வயல்களில் போதியளவு நீர் காணப்படுவதால் நெல் வயல்களில் களை பிடுங்கும் வேலைகள் அம்பன் குடத்தனை நாகர் கோயில் பகுதியில் மும்முரமாக ஆரம்பிக்கப்பட்டன. (இ-36)

## பிள்ளைகளின் சுபீட்சத்தைக் கருதி அர்ப்பணித்துப்பணிசெய்யவேண்டும்

### சேவை நலன் பாராட்டுவிழாவில் பேச்சு

நெடுந்தீவு, டிசெ. 8

எமது பிள்ளைகளின் எதிர்கால சுபீட்சத்துக்கு கல்வியின் தேவை இன்றியமையாத ஒன்று என்பதை உணர்ந்து தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றியவர் அதிபர் திருமதி அன்ரனி. அவரது முன்னுதாரணத்தை கல்விப் புலத்தில் பணியாற்றும் ஏனையோரும் பின்பற்ற வேண்டும்.

நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திருமதி பி. எம். கே. அன்ரனிக்கு ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து நடத்திய சேவை நலம் பாராட்டு விழாவில் பேசிய நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய பதில் அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் தமது உரையில் கூறியதாவது:-

மாணவர்களைக் கல்வியிலும், ஒழுக்கத்திலும் மேம்பட்டவர்களாக ஆக்குவதில் ஆசிரியர்களின் பங்கு முன்னணியில் இருப்பதால் எமக்கு வழிகாட்டியாக இருந்து செயற்பட்டு எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவிய எமது அதிபர் திருமதி அன்ரனி தனது 36 வருட சேவையில் பெரும்பகுதியை எமது மாணவர்களின் நலனுக்காகவே வழங்கியவர். அவரது பணியை நாம் தொடர்ந்து பின்பற்றுவோம்.

இவ்வாறு அவர் பேசும் போது கூறினார்:-

தீவக கல்விவலயப் பணிப்பாளர் எஸ். விக்னேஸ்வரன் பேசும் போது போதிய வசதிகளற்ற நிலையிலும் ஒரு கல்விக் கூடம் தனது மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்குகின்றது என்றால் அந்தக் கல்விக் கூடத்தின் அதிபர் ஆசிரியர்களின் கடமை உணர்வு உயர்ந்த நிலையில் இருக்கிறது என்பதே அர்த்தம். ஓய்வுபெற்றுச் செல்லும் அதிபர் திருமதி அன்ரனி இந்தப் பாடசாலையினதும் மாணவர்களினதும் உயர்வுக்கு ஆற்றிய தொண்டே இன்றைய பாராட்டு விழாவுக்குக் காரணம் என்றார்.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ், தில்லைநாதன் உட்பட பலர் உரையாற்றினர். திருமதி அன்ரனி பதிலுரை வழங்கினார். (இ-111)

# செய்திக் கொத்து

## தராசுகளுக்கு முத்திரையிடல்

கொழும்புத்துறை, டிசெ. 8

அச்சுவேலி பிரதேச சபை அலுவலகத்தில் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி நேற்று ஆரம்பமாகியது. இன்றும் அந்தப் பணிநடைபெறும்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இப்பகுதியில் உள்ள சந்தை வியாபாரிகள், கடை உரிமையாளர்கள், பேக்கரி உரிமையாளர்கள், விறகுகாலையைச் சேர்ந்த சகலரும் தவறாது தத்தமது தராசுப்படிகளுக்கும், நிறுவை அளவை உபகரணங்களுக்கும் முத்திரையிட்டுக் கொள்ளுமாறு யாழ்.செயலக நிறுவை அளவைத் திணைக்களப் பொறுப்பதிகாரி கா. நாகலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-30)

## பன்னவேலைப் பயிற்சி

ஊர்காவற்றுறை, டிசெ.8

ஊர்காவற்றுறை உப்புக் குளம் வீதியில் பன்னவேலைப் பயிற்சி நிலையம் தற்போது இயங்கி வருகின்றது. 30 மாணவிகள் இப் பயிற்சியில் இணைந்துள்ளனர். மூன்று மாதங்கள் இப் பயிற்சி வழங்கப்படும்.

பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன் நடைபெறும் இப் பயிற்சியில் கலந்து கொள்ளும் மாணவிகளுக்கு மாதம் ஐந்நூறு ரூபாய் உதவியாக வழங்கப்படும். இந்நிதியை ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் வழங்கியுள்ளார். (ஐ - 16)

## தையற் பயிற்சிக்கு விண்ணப்பம்

வலி. தெற்கு, டிசெ. 8

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினரால் மேற்கொள்ளப்பட இருக்கும் தையற் பயிற்சிக்கு பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குள் வசிக்கும் 16 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சிக்கு விண்ணப்பிப்போர் ஆகக் குறைந்தது ஏழாம் ஆண்டு வரையாவது கல்வித் தகைமை பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பங்களை டிசெம்பர் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் உடுவில் பிரதேச செயலருக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ். ஆர். ஜெயப்பிரகாசம் தெரிவித்துள்ளார். (ஐ - 152)

## வீதி திருத்தப்படவில்லை

வளலாய். டிசெ. 8

இராணுவ நடவடிக்கையால் முற்றாகச் சேதமடைந்த தம்பாலை விமான நிலைய வீதியைத் திருத்துவதற்கு கற்கள் குவிக்கப்பட்டும் இன்னும் அந்த வீதி திருத்தப்படவில்லை.

இதனால் மீளக்குடியேறிய மக்கள் போக்குவரத்துக்கு பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர். (ஐ-178)

## பதவி உயர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 8

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில்பலருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை சாலை முகாமையாளராக எஸ். கமலநாதனும்—

விசாரணை உத்தியோகத்தராக க. கனகராசாவும்—

கணக்குப்பகுதியில் தரம் ஐந்துக்கு திருமதி ப. சிவபாலசுந்தரமும்— பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

வவுனியா சாலையின் கணக்காளராக க. சிவபாலன் பதவி உயர்வு பெற்றுச் செல்கிறார். (இ-3)

## பழமரக்கன்று விநியோகம்

கோப்பாய், டிசெ. 8

உரும்பிராய் கமநல சேவைகள் நிலையத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு விவசாயிகளுக்கு பழமரக்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளன. (ஐ-72)

## புதிய தொலைபேசி இணைப்புகள்

வலி. வடக்கு, டிசெ. 8

வலி. வடக்கு, வலி. தெற்குப் பிரதேச சபைகளுக்குமோட்டோறோலா தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் வலி. வடக்கு பிரதேச சபைத்தலைவர் இல்லம், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம், மல்லாகம் சந்தியிலுள்ள தனியார் கடை ஆகியவற்றுக்கும் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-86)

## தென்னையில் ஏறியவர் வீழ்ந்து காயம்

நெல்லியடி, டிசெ. 8

கள் சீவுவதற்கு தென்னை மரத்தில் ஏறிய சீவல் தொழிலாளி ஒருவர் மரத்திலிருந்து தவறி நிலத்தில் வீழ்ந்து காயமடைந்தார்.

இச்சம்பவம் சனியன்று மாலை 4 மணியளவில் பொலிகண்டியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை நற்குணம்(வயது 60) என்பவரே மரத்திலிருந்து வீழ்ந்து இடுப்பு எலும்பு முறிந்த நிலையில் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-15-109-139)

## யுவதி காயம்

தென்மராட்சி, டிசெ. 8

மோட்டார் சைக்கிள் செலுத்தும் பயிற்சியில் ஈடுபட்ட இளம்பெண் மோட்டார் சைக்கிளிலிருந்து தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி விளைவேலி துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு அருகில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சதாசிவம் ராஜினி வயது 19) என்பவரே காயமடைந்தவராவார். (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லக்கி கல்வி நிலையம்

கட்டுடை கிளை: தொட்டிலடி

புதிய கல்வியாண்டு 1999க்கான புதிய வகுப்புக்கள்
ஆண்டு 3 – 11 வரை

ஆரம்பம்: 9-12-1998 புதன் பி. ப. 3-30 மணி

சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களால்
போதிக்கப்படும்.

நிர்வாகி

(61171)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 22 — 03 — 1941



விண்ணில் 26 — 11 — 1991

அமரர்

### செல்லத்துரை கனகசபாபதி

(முன்னாள் உதவி அரசாங்க அதிபர், ஒட்டுசுட்டான்)

திதி: 08 – 12 – 1998

எண்ணமெலாம் எந்நாளும் கல்வியில் கொண்டு
சீர்பெருகு சிவனெறியிற் சிந்தை கொண்டு
வந்தனைகள் செய்து சேவையிலும் மெருகுடன்
விண்ணகமும் சென்றதுந்தன் நீா தூர நியதியன்றோ?

உமது பிரிவால் துயறுரும்:
மனைவி, சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(61167)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

### ஐயாத்துரை செல்வமலர்

மலர்வு: 1946–04–24 உதிர்வு: 1998–11–08

வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐ. செல்வமலரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (08-12-98) இடம் பெறும்.

அன்னார் அமரர் செல்லத்துரை சேதுப்பிள்ளை தம்பதிகளின் பிள்ளைகள் ஈர் ஐவரில் நான்காவது புத்திரியாவார்.

இவர் திருமதி சாரதாதேவி இராசரத்தினம் (வீமன்காமம்), சாம்பசிவம் (M.L.T. ஆஸ்திரேலியா), சிவபாலன் (B.Sc., ஆஸ்திரேலியா), சிவநாதன் (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை கணக்காளர் பகுதி), சிவானந்தம் (சவுதி), சுந்தரலிங்கம் (இலங்கை வங்கி, கொழும்பு), சத்தியமூர்த்தி (விஞ்ஞான - கணித ஆசிரியர், மகாஜனக் கல்லூரி), குமார் (B.Sc., புறூணை), சுதா (மின் பொறியியலாளர், தாய்லாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

இவரின் பிரிவால் துயருறும்:
து. ஐயாத்துரை (C.T.B)
(கணவன்)

நாவற்குழி,
கைதடி.

## எழுதுவினைஞர் சித்தி

திருநெல்வேலி, டிசெ. 8

யாழ். சுகாதார திணைக்களத்தில் தரம் இரண்டு ''ஆ'' பிரிவிலுள்ள எழுதுவினைஞர்களை ''அ'' பிரிவுக்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை அண்மையில் நடத்தப்பட்டபோது அதில் ஏழு எழுதுவினைஞர்கள் சித்தி அடைந்தனர்.

க. அற்புதராணி, ந. கயல்விழி, எஸ். நாகேஸ்வரி. ஆர். நந்தினி, நளாயினி லற்றீசியா, திருமதி தி. சந்திரிக்கா, எம். சாந்தசீலன் ஆகியோரே இப்போட்டிப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களாவர். (இ-135)

## தளபாடங்கள் வழங்கப்பட்டன

ஊர்காவற்றுறை, டிசெ. 8

ஊர்காவற்றுறை கரம்பொன் அண்ணா முன்பள்ளி மாணவர்களுக்கான மேசைகள், கதிரைகள் என்பன ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகத்தினால் அண்மையில் வழங்கப்பட்டன. (இ-16)

## அந்தியேட்டி மடம் புனரமைப்பு

சேதமடைந்த நிலையில் இருந்த மாதகல் வடக்கில் உள்ள இந்துசபய மக்களுக்கான அந்தியேட்டி மடம் 70 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலரினால் இவ்வருட பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. (இ-135)

## இடமாற்றம்

சண்டிலிப்பாய், டிசெ. 8

கட்டுடைச்சந்திக்கருகில் இயங்கி வந்த சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அலுவலகமும் கால்நடைப் பண்ணையும் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் சண்டிலிப்பாய் — சங்கானை வீதியிலுள்ள கட்டடம் ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (இ-135)

## ஆலயக்கூரை ஓடுகள் திருட்டு

நெல்லியடி, டிசெ. 8

ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த இரவுநேரம் ஆலய மண்டபக் கூரையிலிருந்து 40 ஓடுகள் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் கடந்தவாரம், துன்னாலை தாமரைக் குளத்தடி நரசிம்மர் வைரவர் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது. (ஐ-109)

## பாலர் பாடசாலை புனரமைப்பு

கொழும்புத்துறை, டிசெ. 8

கோப்பாய் தெற்கு கட்டப்பிராய் சனசமூக நிலைய பாலர் பாடசாலை தற்போது புனரமைக்கப்பட்டு வேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

இக்கட்டடத்தின் திறப்பு விழா ஜனவரி மாதம் நடைபெறும். (ஐ-30)

## I. A. S

ஆவரங்கால்

புதிய
கல்வியாண்டு - 99
ஆண்டு 4—11 வரையான
வகுப்புக்கள் ஆரம்பம்
09 -12 - 98 புதன்
பி. ப. 4-00 மணி.

நிர்வாகி

## MATHS CENTRE

M. M. V. Road, Nelliady.

புதிய கல்வியாண்டு - 99

★ ஆண்டு 5 தொடக்கம் 11 வரையான வகுப்புகள்.
★ ஆரம்பம்: 10 - 12 - 98 வியாழன்
பிற்பகல் 3. 30 மணி
★ ஆண்டு 5 - க்கான விசேட புலமைப்பரிசில் வகுப்புகள் நடைபெறும்.
★ A / L DAY CLASS ( கலை - வர்த்தகம் ) விரைவில் ஆரம்பமாக உள்ளது.

(சி/5737)

யாழ்ப்பாணம்

## சைவபரிபாலன சபை

### ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 119-வது குருபூசை விழா

9-12-98 இல் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவிருந்த மேற்படி குருபூசை விழா தவிர்க்க முடியாத காரணத்தால் யா/ யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

நேரம் முற்பகல் 9-00 மணி (புதிய நேரம்)

சைவபரிபாலன சபை

(சி/5736)

## ஐடியல் கல்வி நிலையம்

நீர்வேலி

புதிய நிர்வாகத்தின் கீழ்
திறமைமிக்க ஆசிரியர் குழுவுடன்
புதிய கல்வி ஆண்டு ஆரம்பம்.
ஆண்டு 1 முதல் O/L வரை

காலம்: 09—12—98 புதன் மாலை 4-00 மணி

- உயர்தர கலை, வர்த்தக வகுப்புக்கள் வழமையான ஆசிரியர் குழுவுடன் நடைபெறுகின்றன.
- A/L 99 வினாவிடை வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

(61165) நிர்வாகி

## கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத் தலைவர்
திரு. ஐ. சிவராசா
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
**ஐயாமுத்து தங்கம்மா**

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

நிர்வாகசபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள்.
பாலர் பகல் விடுதி, நீர்வேலி.

(61173)

பழைய புதிய வாடிக்கையாளர்களுக்கு

## T. V. அன்ரனா

தற்சமயம் ரூபவாஹினி நிகழ்ச்சிகளை தெளிவாகப் பார்ப்பதற்கு U. H. F. அன்ரனாக்களை மாற்ற வேண்டி இருப்பதால் எம்மால் பொருத்தப்பட்ட அன்ரனாக்களோடு U. H. F. அன்ரனாக்களையும் U. H. F., V. H. F. பூஸ்ரர்களையும் குறைந்த செலவில் பொருத்திட எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

**சகல அன்ரனாக்களும் பொருத்தித் தரப்படும்.**

ரி. வி, றேடியோ, டெக், மணிக்கூடுகள் என்பவற்றைத் திருத்தவும், வாங்கிக் கொள்ளவும் நாடுங்கள்:

(சகல SONY, NATIONAL T. V. க்கள் 2060, 2072, 2032 போன்றவை)

### வீனஸ் டெல்கா

கிளை: 140, K. K. S. வீதி, (சத்திரத்துச் சந்தி)
யாழ்ப்பாணம்.

தலைமையகம்:
284, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(நாகவிகாரை முன்பாக)

TEL. 2064

(சி/5740)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# உதயன்

## தவிர்ப்பதே நல்லது

ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் கோருவதற்காக தமிழர்கள் தொடர்ந்தும் அந்நாடுகளுக்குச் சென்று கொண்டேஇருக்கின்றனர். போலந்தில் 300 தமிழர்கள் கைது செய்யப்பட்ட சம்பவம் அதனை எடுத்துக் காட்டும் நிகழ்வே.

தமது சொந்த இடங்களில் நிம்மதியாக, வசதியாக வாழ முடியாத நிலை வடக்கு—கிழக்கில் தொடர்கிறது என்பது மறைக்க முடியாத உண்மையாகும்.

இதனால் தமிழ் இளைஞர், யுவதிகள் மட்டுமன்றி வயதில் மூத்தவர்களும் வெளிநாடுகளுக்குச்செல்ல விரும்புவது இயல்பாகிவிட்டது.

ஐரோப்பியநாடுகளில் தஞ்சம் கோருவோரில் அனேகர் அரசியல் அகதிகளாக அன்றி பொருளாதார அகதிகளாகவே செல்கின்றனர் என்றே அரசு வெளிநாடுகளில் பிரசாரம் செய்து வைத்துள்ளது.

அதில் உண்மை இல்லையென்று இல்லை.

ஆனால் வடக்கு—கிழக்கில் நடைபெறும் போரின் காரணமாக வேலை வாய்ப்பு உட்பட மக்களின் வழமையான வாழ்க்கைக்குரிய வளங்களும் வாய்ப்புகளும் குன்றிவிட்டன என்பதும் உண்மையாகும்?

அதனால் வடக்கு—கிழக்குத் தமிழ் மக்கள் இந்த நாட்டை விட்டுப் போய் விட்டால் போதும் என்ற மனநிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். வெளிப்பார்வைக்கு யாவும் சுமுகமாகவும், சுமாராகவும் இருப்பதாகத் தோன்றினாலும், அவ்வாறு காட்டப்பட்டாலும் உள்ளே நீறுபூத்த நெருப்பின் நிலையே தொடருகிறது!

அரசாங்கம் செய்த பிரசாரங்களின் காரணமாக ஈழத்தமிழர்களுக்கு தஞ்சம் அளிப்பதற்கு ஐரோப்பிய நாடுகள் இப்போது மறுக்கின்றன, பின்னடிக்கின்றன.

இது நன்றாகத்தெரிந்தும் பயண முகவர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி, பெரும் பணத்தைச் செலவிட்டு வெளிநாடு சென்றடைய விரும்புவோர் பல கஷ்டங்களையும் அனுபவிக்கின்றனர். இடைநடுவில் அகப்பட்டு உயிரிழந்தவர்களும் உளர். சம்பந்தப்பட்ட ஐரோப்பிய நாட்டு அரசுகளால் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்களும் பலர்.

அந்தப் பக்கத்தில் சாதகமான வாய்ப்பான நிலை இல்லை என்று தெரிந்தும் ஆபத்தை விலைக்கு வாங்குவது போல நடந்து கொள்கிறார்கள் தமிழர்கள் பலர்.

இந்த இருதலைக் கொள்ளி எறும்பு நிலையைத் தேடிக் கொள்வது அவசியம் தானா? சொந்த மண்ணில் துன்பங்கள், கஷ்டங்கள், வேதனைகளைத் தாங்கிக்கொண்டேனும் வெளிநாட்டில் தஞ்சம் கோருவதை நிறுத்திக் கொள்வது சிறந்தது.

வெளிநாடுகள், குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் பல்வேறு அரசியல், பொருளாதார காரணங்களை முன்னிட்டு ஈழத்தமிழர்களுக்கு தமது கதவுகளை மூடத் தொடங்கிவிட்டன. ஆகையால் கள்ளத்தனமாக, சட்டவிரோதமாக அவற்றுக்குள் நுழைய எத்தனிப்பது இனிமேல் ஆபத்தானதே. அதனைத் தவிர்த்துக்கொள்வதே நல்லது.

# மாணவர் வினைத்திறனை வளர்க்க கண்காட்சிகள் உந்து சக்தியாகும்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இன்று தொடக்கம் 3 நாள்களுக்கு விஞ்ஞானக் கண்காட்சி நடைபெறுகிறது.

பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம்

விஞ்ஞானக்கல்வியை சிறப்பாகப் போதிப்பதற்கு செய்முறைகள் (Practicals) அவசியமாகும். தற்காலத்தில் இங்கு இது முற்றாக சாத்தியமாகாத நிலையில் கண்காட்சிகள் வைத்து அவற்றின் மூலமாக மாணவர்களுக்கு செய்முறைகளைத் தெரிய வைப்பது அவசியமான செயற்பாடாக உள்ளது. இதன் காரணமாகத்தான் கண்காட்சிகள் பலவாறாக இங்கு பல்வேறு கல்லூரிகளில் நடைபெறுகின்றன. இதனால் மாணவர்கள் பல விதத்தில் நன்மை பெற வாய்ப்புகள் இருக்கின்றன.

மாணவர்கள் தங்கள் கல்லூரிகளில் உள்ள வளங்களைக் கொண்டு தம் ஆசிரியர்களின் மேற்பார்வையில் தங்களுக்குத் தெரிந்த வகையில் பல்வேறு மாதிரிகளை செய்து கல்லூரிகளில் நடைபெறும் கண்காட்சிகளில் காண வைக்கிறார்கள். வகுப்பறையில் மணிக்கணக்காகப் போதிப்பதிலும் பார்க்க, செய்முறையால் ஒரு கண்காட்சிப் பொருளினை மாணவர்கள் அமைக்கும் போது மாணவர்களின் வினைத்திறன் வெளிப்படையாகத் தெரியும் இச்செயல்முறை மாணவர்கள் யாவருக்கும் ஒரு உந்து சக்தியாக இருக்கும். இதனை அதிபரும் ஆசிரியரும் முழு அளவில் ஆதரிப்பார்கள் என்பது வெளிப்படை. இதனால் கல்லூரி பயன் அடைவதோடு மாணவரும் உயர்ச்சி அடைய ஏதுவாகின்றது.

### பல்கலைக்கழக விஞ்ஞானக் கண்காட்சி

பல்கலைக்கழகம் உயர்கல்வி நிறுவனமாகும். குறிப்பாக விஞ்ஞானத்துடன் தொடர்பு கொண்ட முக்கியமான விஞ்ஞான விடயங்களையும் உயர்தர வகுப்பிற்குத் தேவையான கல்வியையும் அதனை மேம்படுத்தும் முறைகளையும் செயற்படுத்தப்படுகிறது. இதன் காரணமாக பல்கலைக்கழக மாணவர்கள் தமது பாடங்களைப் பல்வேறு விதத்தில் கிரகிப்பது மட்டுமல்லாது, ஏனையோருக்கும் அதனை விளங்கப்படுத்துவதிலும் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்கிறார்கள். இந்த வகையில் பல்வேறு பரிசோதனைகளை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மேற்பார்வையில் மாணவர்களுக்கு அறியத்தருவதில் ஆர்வம் காட்டப்படுகிறது.

குறிப்பாக தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதிகவியல் கணனி ஆகியவற்றில் பலவாறான கண்காட்சிப் பொருள்களை வைத்து அவற்றின் நகர்வு (Working Model) மூலம் விளக்குவது தற்கால நடைமுறையில் சிறந்த முறையாகக் கைக்கொள்ளப்படுகின்றது. மேலும் பல்கலைக்கழகத்தில் பல்வேறு பிரிவுகளாக பாடங்கள் அமைவதால், அவற்றை விசேடமாகக் கற்று, மற்றையோர்க்கு கண்காட்சிப் பொருள்கள் மூலமாக விளக்க ஏதுவாகின்றது. மேலும் துறைசார் நிபுணர்கள் பல்கலைக்கழக விஞ்ஞானத் துறையில் இருப்பதாலும் இது சுலபமாக இருக்கிறது.

### வெளிநாட்டில் கண்காட்சி

யாழ்ப்பாணத்தில் அரும்பொருள் காட்சியகம் ஒன்று எப்போதோ இருந்தது. அது இன்று இல்லை. மிருகக் காட்சிச்சாலைஇங்குஇல்லை. இவற்றை எதிர்காலத்தில் ஸ்தாபிக்கும் சாத்தியக்கூறும் இன்று இல்லை. வெளிநாடுகளில் பல்வேறு விதமான அரும்பொருள் காட்சியகங்கள் இருக்கின்றன. அங்கு பல்வேறு விதமான காட்சிகள் வைக்கப்பட்டு உள்ளன. குறிப்பாக லண்டனில் உள்ள இயற்கை வரலாற்று அரும்பொருள் காட்சியகம் (London Natural History Museum) என்ற நிலையத்தில் பல்வேறு விதமான கண்காட்சிகளும், மிருகங்களினதும், மனிதனினதும் உடற்றொழில் சம்பந்தமான கண்காட்சிகளும். இரசாயன, பௌதிகம் தொடர்பான கண்காட்சிகளும் சிறப்பான விதத்தில் வைக்கப்பட்டுள்ளன.

அங்கு மாணவர் தமது புத்தகங்கள் மூலமாக விளங்க முடியாத பல விடயங்களை, தத்ரூபமாக, யதார்த்த பூர்வமாக விளங்கிக் கொள்ளக் கூடிய முறையில் கண்காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கண்காட்சியில் மாணவர்கள் ஒரு பொத்தானை அழுத்துவதன் மூலமாகவிளக்கத்தினைக்கேட்கவோ, பார்க்கவோமுடியும். இதேநிலையை மிருகக்கண்காட்சி (London Zoo) தாவர கண்காட்சி (Kew Royal Botanic Gardens) ஆகிய இடங்களிலும் காண முடியும். இதே போன்று அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பலவாறானகண்காட்சி சாலைகளைக் காணமுடியும். ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இது போன்ற வழிகளில் மாணவர்களுக்கு கல்வி பயிற்றப்படுகிறது.

இவையெல்லாம் மாணவர்களுக்கு சிறந்த வழி காட்டிகளாக அமைகின்றன. துரதிர்ஷ்ட வசமாக இப்படியான ஒன்றும் இங்கு இல்லை. இதனால் மாணவர்கள் மிகவும் பாதிப்புக்கு ஆளாக்கப்படுகின்றார்கள். இதை நிவிர்த்தி செய்யும் பொருட்டு கண்காட்சிகள் வைத்து மாணவர்களுக்கு விஞ்ஞான விடயங்களை விளங்க வைப்பது மிகவும் அவசியம் ஆகின்றது.

### மாணவர்களின் எதிர்காலம்

எமது மாணவர்களின் எதிர்காலம் கல்வியிலேயே தங்கி உள்ளது. யாழ்ப்பாணத்தில் பல வழிகளில் கல்விப் பாரம்பரியம் வளர்ச்சி அடைந்து வரினும், விஞ்ஞானக் கல்விக்கே முக்கியம் கொடுக்க வேண்டும். ஏனெனில் எதிர் வரும் நூற்றாண்டில் விஞ்ஞானத்தில் இருந்து நாம் பல விடையங்களை அறுவடை செய்யவேண்டி உள்ளது. அதன் பொருட்டு மாணவர்களை நாம் தயார்ப்படுத்தி வைக்க வேண்டும் விஞ்ஞான விடயங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு மாணவனுக்கும் தெரியச் செய்வது இன்றியமையாதது ஆகும்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் மீதான நம்பகத்தன்மை செய்தித் தணிக்கையால் இழப்பு

எஸ். சிவநாதன்

இலங்கையில் இப்போது இராணுவம் சம்பந்தப்பட்ட செய்திகள் தகுதி வாய்ந்த இராணுவ அதிகாரியிடம் அனுமதி பெற்ற பின்பே வெளியிடப்பட வேண்டும். இது அவசரகால பிரகடனத்தின் கீழ் ஜனாதிபதியால் கொண்டுவரப்பட்ட சட்ட விதியாகும். இச் சட்ட விதியால் ஏற்படும் அரசியல் பாதிப்பை ஆய்வு செய்வது பொருத்தமானதாகும்.

முதலில் சில வதந்திகள் சம்பந்தமான உளவியல் கொள்கைகளை நோக்குவோம். அரசியல் முக்கியம் அல்லது சமூக முக்கியம் வாய்ந்த ஒரு நிகழ்வானது அச்சு, இலத்திரன் வெகுசன ஊடகங்களுக்கு உட்படுத்தப்படும் போது அது பிரபல்யம் பெறுகின்றது. அதற்குக் கொடுக்கும் முக்கியமானது வெகுசன ஊடகங்களின் நிர்வாகத்தைப் பொறுத்தது.

உதாரணமாக சமூக தாக்க மற்ற ஒரு நிகழ்ச்சியை பத்திரிகைத் தலைப்பாகக் கொட்டை எழுத்தில் போட்டால் அது குறிப்பிட்ட முக்கியத்துவத்தைப்பெறும். பத்திரிகைத் தலைப்புச் செய்தியானது அந்தச் செய்தியின் முக்கியத்தில் தங்காது குறிப்பிட்ட தாக்கத்தை வாசகர்களிடம் பெறும். மாறாக அச்செய்தியானது தடுக்கப்படும் இடத்து




பெரிய பாதிப்பைப் பெறும். இது பலவகையான வதந்திகளுக்கு இட்டுச் செல்லும். இதுதான் இன்றைய இராணுவச் செய்திகளுக்கு நடக்கும் கதியாகும். வெகுசன ஊடகங்களுக்குத் தணிக்கை போடுமிடத்து சிறிதாகக் கசிந்தாலும் பெரிய வடிவம் பெறுகின்றன.

ஒரு மாதிரி நிகழ்ச்சியைப் பார்ப்போம். ஓர் இராணுவச் சமரில் 84 படையினர் காயப்பட்டுள்ளனர் என்பது செய்தியாகும். காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டும், சிப்பாய்கள் சிகிச்சைக்குச் செல்லும்போது அச் செய்தியை அரசால் கட்டுப்படுத்த முடியாது தணிக்கை நடைமுறையில் இருந்தால் 84 என்ற எண்ணிக்கை 100 இற்கு மேல் என்று ஆரம்பத்தில் திரிபடையும்; தொடர்ந்து அது 150 இற்கு மேல் என்று படிப்படியாக விரிவடையும். இது பின்பு பலவிதமான வதந்திப் பரம்பல்களிற்கு உட்படும். இதற்கு இத்தனை என்று ஒரு சரியான அளவை அரசாங்கம் கொடுக்கும் இடத்து இவ்வகையான வதந்திகட்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதாகி விடும்.

மேலும் எதிர்கட்சித் தலைவர் இவ்வாறான இராணுவச் செய்திகளைப் பெறுவதற்கு ஓர் அலுவலகத்தைத் திறந்துள்ளார். பலர் இந்த அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம். அப்போது அந்த அலுவலகத்தால் கொடுக்கப்படும் செய்தியானது உண்மை வடிவம் என்ற பெயரைப்பெறும். இது பின்பு சக்தி வாய்ந்த வதந்திகளுக்கு உட்படும். அரசாங்கத்தினால் இதனைத் தடுப்பது கடினம். எதிர்க்கட்சிக் கூட்டங்களில் கூறப்படும் எதிர்மறையான இராணுவச் செய்திகள் அதிகமாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இராணுவச் செய்திகள் எப்படியோ இலங்கைக்கு வெளியிலும் கசிகின்றன. பின்பு இவை B.B.C., I.B.C., சந்தேசிய போன்ற வீரிய மிக்க ஊடகங்களால் மீண்டும் இலங்கைக்கு வந்து சேருகின்றன. அவை சரியான செய்தி, நடு நிலையான செய்தி என்ற அங்கீகாரம் பெற்ற செய்தியாகக் கொள்ளப்படுகிறது.

அடுத்ததாக, வதந்திகட்கு காரணம் முரண்பட்ட, மாறுபட்ட செய்திகளாகும். அரச செய்திகட்கும் அரசு தவிர்ந்த வெகுசன ஊடகங்களின் செய்திக்கும், இடையில் வேறுபாடு உண்டு. எனவே உண்மை எது என்ற நிலைக்கு மக்களால் வரமுடியாத நிலை உருவாகிறது. ஒரே செய்தியாக இருப்பின் முரண்பாடும் இல்லை, வதந்தியும் வளராது.

செய்திகளைத் தணிக்கை செய்வதால் அரசு மக்களிடம் நம்பகத்தன்மையை இழந்து வருகின்றது. உதாரணமாக, போரை இராணுவ ரீதியாக முடிப்பதற்கு பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் எத்தனையோ தடவைகள் காலக்கெடு கொடுத்துள்ளார். இத்தகைய காரணங்களால் அரசு நம்பகத்தன்மையை இழந்து வருகின்றது.

அரசின் அங்கீகாரத்தின் பின்னர், தணிக்கை செய்யப்பட்ட பின்னரே செய்திகள் வெளியிடப்பட்டும் நிலை மக்களைக் குழப்புவதோடு அரசியல் நம்பகத்தன்மைக்கும் ஒரு சோதனையாகும். எனவே அரசு தனது மதிப்பை உயர்த்த வேண்டுமெனில் தணிக்கையை நீக்குவது அல்லது தளர்த்துவதேனும் அவசியம். அரசு இது குறித்தும் சிந்தித்தால் நல்லது,

★

**நாளை**

கார்த்திகை 23
புதன்கிழமை
திதி: ஷஷ்டி
பிற்பகல் 2.53 வரை.
நட்சத்திரம்: மகம்
காலை 6.14 வரை
நாவலர் குருபூஜை
சுபநேரம்: 4.48- 6.18
ராகுகாலம்: 12.18-1.48
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

தம் கட்சியில் உண்மை இருக்க வேண்டுமென்று ஒவ்வொருவரும் விரும்புகிறார்கள்; ஆனால் ஒவ்வொருவரும் உண்மையின் கட்சியில் சேர விரும்பவில்லை.

—வாட்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மன் உதவியுடன் புனரமைக்க மேலும் 16 பாடசாலைகள் தெரிவு

வலிகாமம் தெற்கு, டிசெ. 8

ஜேர்மன் தொழில் நுட்ப கூட்டு நிறுவனம் அடுத்த வருடம் 16 பாடசாலைகளின் புனரமைப்புப்பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தை மேற்கொள்ள அந்த நிறுவனம் இரு கோடியே 70 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பாடசாலைகள் வேலைத்திணைக்களம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

இவ்வாண்டு எட்டுப் பாடசாலைகள் புனரமைக்கப்பட்டிருந்தன.

அடுத்த வருடம்புனரமைக்கப்படவிருக்கும் பாடசாலைகளின் விவரம் வருமாறு:

★ பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி.

★பண்டத்தரிப்புபெண்கள் பாடசாலை,

★ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி,

★ மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி,

★ சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி,

★ உரும்பிராய் இந்துக் கல்லூரி,

★ இடைக்காடு மகா வித்தியாலயம்,

★ பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி (இரண்டாம் கட்டம்],

★ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்,

★ யாழ்ப்பாணம் சென். சார்ள்ஸ் மகாவித்தியாலயம்,

நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயம்,

★ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்,

★ சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம்,

★ யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை,

★ கொக்குவில் ஸ்ரீராம கிருஷ்ண வித்தியாலயம்,

★ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி. (இ-8-152)

## செம்மணிப் புதைகுழி தகவல் வெளியிட்ட சிப்பாய் பாதுகாப்புக் கோருகிறார்

கொழும்பு, டிசெ. 8

கிரிஷாந்தி குமாரசுவாமி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டவரும் செம்மணிப் புதைகுழி தொடர்பான விவரங்களை வெளியிட்டவருமான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தன்னைப் பாதுகாப்பான சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யுமாறு மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சோமரத்ன ராஜபக்ஷவை இம்மாதம் முதலாம் திகதி மனித உரிமை ஆணைக் குழு அதிகாரிகள் சிறையில் சென்று சந்தித்தனர்,

வெலிக்கடை சிறைச்சாலையில் தனக்கு உரிய பாதுகாப்பு இல்லை என்றும்—

இதனால் கொழும்பைத் தவிர்ந்த வேறு இடங்களில் உள்ள சிறைச்சாலைகளில் ஒன்றுக்கு தன்னை இடமாற்றம் செய்ய வேண்டும் என்றும்—ராஜபக்ஷ ஆணைக் குழு அதிகாரிகளிடம் கோரியுள்ளார். [இ-6-10]

## அன்பளிப்பு

கொழும்புத்துறை, டிசெ. 8

கொழும்புத்துறை வைஷ்ணவ நூல் நிலையத்துக்கு யாழ். சிறுவர் பாதுகாப்பு நிலையம் ஒருதொகை அறிவு நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (இ-30)

## பரிசளிப்பு விழா

யாழ். நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் யே. யேசுதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் நா. தணிகாசலம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-8)

## மாணவர் வினைத்திறன்..

(ஏழாம் பக்கத் தொடர்)

இதற்காக ஒவ்வொரு கல்லூரிகளிலும் விஞ்ஞானக் கண்காட்சி நடைபெறுவது போல பற்பல நிறுவனங்களிலும் கண்காட்சி வைத்து விஞ்ஞான அறிவை மாணவர்களில் முன்னேற்றுவது முக்கிய கடமையாகும். இது போன்று பல்கலைக்கழகத்தில் கண்காட்சி வைப்பது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு இன்றியமையாதது ஆகும். இதன் பொருட்டே இவ் விஞ்ஞானக் கண்காட்சி பல்கலைக்கழகத்தில் வைப்பதாக முடிவு செய்யப்பட்டது. அதிபர் ஆசிரியர்கள் இதில் அக்கறை காட்டி மாணவர்களுக்கு ஊக்கம் கொடுப்பதன் மூலம் மாணவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய உதவுவார்கள் என எதிர்பார்க்கலாம்.

### பேராசிரியர் மகேஸ்வரன் நினைவாக

பேராசிரியர் மகேஸ்வரன் அவர்கள் பல்கலைக்கழகத்திற்கு ஆற்றிய சேவைகள் பன்முகப்பட்டவை. குறிப்பாக இரசாயனத் துறையின் முதல்வராகவும், சிரேஷ்ட விரிவுரையாளராகவும், சிரேஷ்ட பேராசிரியராகவும், விஞ்ஞான பீடாதிபதியாகவும் ஆற்றிய சேவைகள் மிக்க புகழுக்கு உரியதாகவும், விஞ்ஞான பீடத்தின் இன்றைய நிலைக்கு ஆதாரமாகவும் அதன் எதிர்கால வளர்ச்சிக்கு உந்து சக்தியாகவும் இருக்கின்றன என்றால் அது மிகையாகாது. அமரர் பேராசிரியர் மகேஸ்வரன் அவர்களின் நினைவாக இக்கண்காட்சி நடத்தப்படுகின்றது. ★


## பாராட்டு விழா

எமது கல்லூரி முன்னைநாள் ஆசிரியை
சிவத்தமிழ்ச் செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்கள்
கலாநிதிப்பட்டம்
பெற்றமையையிட்டு பாராட்டு வைபவமொன்று நடைபெறவுள்ளது.

**இடம்:-** கல்லூரி மண்டபம்
**காலம்:-** 10 - 12 - 98 வியாழன் காலை 10.00 மணி
தலைவர்:- அதிபர் திரு. சு. புண்ணியசீலன்
பாராட்டுரை;- கலாநிதி சபா. ஜெயராசா
கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
பழையமாணவர், பா. அ. சங்கம்.
யா/ யூனியன் கல்லூரி,
யா/ பொன்பரமானந்த ம. வி. (61180)


## ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் தாதியர் பயிற்சி நெறிக்கு 37 பேருக்கு நேர்முகப் பரீட்சை

கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் தாதிகள் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களில் 37 பேருக்கான நேர்முகப் பரீட்சை நாளை காலை 9 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் (பிரதியுடன்), கல்வித் தகைமைச் சான்றிதழ் (பிரதியுடன்), பிரதேச செயலரால் மேலொப்பமிடப்பட்ட கிராம சேவையாளரின் நற்சான்றிதழ், குறிப்பிட்ட மாவட்டத்தில் தொடர்ந்து 3 வருடங்கள் வசித்தமையை உறுதிப்படுத்த வாக்காளர் இடாப்புச் சான்றிதழ், (வாக்காளர் இடாப்புப் பிரித்தெடுப்பின் போது விண்ணப்பதாரரின் பெயர் வாக்காளர் இடாப்பில் இல்லாது இருந்தால் குறிப்பிட்ட வாக்காளர் இடாப்பு பிரித்தெடுப்பில் காணப்படுபவரின் மகள் அல்லது மகன் என கிராமசேவை அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டு பிரதேச செயலரால் மேலொப்பமிடப்பட்ட சான்றிதழ்), திருமணமாகவில்லை என கிராமசேவை அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் ஆகியவற்றுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்கள் விவரம் வருமாறு:

★ எஸ். ஜெயந்தி— 70/5, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

★ எஸ். சிவச்செல்வம் — பிள்ளையார் கோயில் லேன், தும்பளை.

★ சி. பிரசாத் — 154, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ ஜே. பாலமுரளி — தும்பளை வீதி, பருத்தித்துறை.

★ ரி நித்யா — பண்டிதர் மாணிக்க தியாகராஜா வீதி, சுன்னாகம்.

★ ரி. உசேந்தி — 505, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

★ வி. மோகனாம்பிகை — இல. 1, கோபால் லேன், கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

★ பி. கஜேந்திரன் — நாவற்காடு, அச்சுவேலி.

★ எஸ். கடம்பரூபன் — 11/7, சென். அன்ரனீஸ் வீதி, சுண்டுக்குளி.

★ ரி. தர்மஜானி — தம்பனை, சுன்னாகம் மேற்கு, பண்டத்தரிப்பு.

★ எஸ். அரவிந்தன் — மூளாய் தெற்கு, சுழிபுரம்.

★ எஸ். கேமலதா — வேதவிலா, ஐயனார் வீதி, மல்லாகம்.

★ ரி. சுதர்சினி — 77, பாரதி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

★ எஸ். சதீஸ்வரன் — ஆலடி, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

★ கே. சதீஸ்சந்திரன் — பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.

★ மேரி கௌசல்யா — 32/16, சென். செபஸ்ரியன் வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்.

★ வி. நிரஞ்சனி — 32/2, புது வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

★ எ. டொறின்தர்சனா— 7/1, அன்னசத்திர லேன், யாழ்ப்பாணம்.

★ பி. சுஜிதா — [illegible] இல்லம், கரணவாய் வடக்கு கரவெட்டி.

★ வி. ரோகினி — 73, காரைக்கட்டு லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

★ வி. முகுந்தன் — 241/6, புகையிரத வீதி, யாழ்ப்பாணம்.

★ வி. மாலதி — நாகலிங்க முதலியார் வீதி, பருத்தித்துறை.

★ எஸ். மஞ்சுளா — சமீலகம், ஐயனார் கோயிலடி, பருத்தித்துறை.

★ கே. கிலாரிஸ் — நித்தரஞ்சினி — சென் மேரிஸ் லேன், பண்டத்தரிப்பு.

★ என். சுகந்தி— மெத்தை வீடு, பூதராயர் லேன், பருத்தித்துறை.

★ வி. தேவநாயகி— மட்டுவில் தெற்கு, சிவன் கோயிலடி, சாவகச்சேரி.

★ கே. திருக்குமாரன் — வட்டுக்கோட்டை தெற்கு.

★ யி. ரமணன் — நாவற்குழி, கைதடி.

★ எஸ். ஆனந்தன் ரவிராஜ்—36, வாசுகி ஸ்ரோர்ஸ், சோமசுந்தரம் அவெனியூ சுண்டுக்குளி.

★ எஸ். சிவரங்கன் — மூத்தநாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டை வடக்கு.

★ ஆர். வித்தியரூபா — சங்கிரிலா, மெமோரியல் லேன், மானிப்பாய்.

★ ரி. புவிபாரதி — நாவற்குழி கிழக்கு, கைதடி.

★ ஜே. கிரிதரன் — 29, அம்பாள் வீதி, கொக்குவில் மேற்கு.

★ எஸ். கோமதி — 40 சேச் வீதி, மட்டுவில் வடக்கு.

★ என். சுதமதி — 89, வைமன் வீதி, நல்லூர்.

★ ஜே. சி. சகிலா, கிரிசாந்தி — 969/14, 2 ஆம் ஒழுங்கை, வலன்புரம், தொழும்புதம்[?].

★ கே. முகுந்தன் — கண்டி றோட், சாவகச்சேரி[?].

(இ-3-15-139)


## நகரசபை, சாவகச்சேரி
## வரவு செலவுத் திட்டம் - 1999

(255ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 1979ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178 (3) ஆம் பிரிவின் பிரகாரம் இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்ட 1999 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் இச்சபையில் **07-12-1998** ஆம் திகதி தொடக்கம் (7) நாள்களுக்கு அலுவலக நேரங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மு. செ. சரவணபவ
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 02-12-98. (சி/5743)


## 34 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 26 — 01 — 1929

மறைவு 05 — 11 — 1998

அமரர்
**சின்னத்தம்பி முருகையா**
(இளைப்பாறிய லிகிதர், அ.ம.ப.நோ.கூ. சங்கம்)

1945 ஆம் ஆண்டு முதல் 45 வருடங்கள் கூட்டுறவுப் பணியாளராகப் பணியாற்றி இளைப்பாறிய அமரரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தினர்.
அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்.
(61176)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பி விளக்கு வீழ்ந்து பெண் எரிகாயம்

யாழ்ப்பாணம், டிசெ. 8

மேசையில் இருந்த குப்பி விளக்கு தட்டுண்டு கீழே விழுந்து தீ பற்றியதில் பெண் ஒருவர் உடல் பூராகவும் எரிந்து காயமடைந்தார்.

கோண்டாவிலில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்வராசா சகுந்தலா (வயது 42) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

மேசையில் வைத்து பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த வேளையே இச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

## பதினொரு வருடங்கள் கடந்த நிலையிலும்

# நாட்டில் தமிழ் மொழி அமுலாக்கல் இன்னும் உருப்படியாக இல்லை

## தமிழர் நடவடிக்கைக்குழு அதிருப்தி

கொழும்பு, டிசெ. 8

தமிழ்மொழியை உத்தியோக மொழியாக அரசாங்கம் அங்கீகரித்து பதினொரு வருடங்களாகின்றன. ஆனால் தமிழ்மொழி அமுலாக்கல் உருப்படியாக இல்லை.

இவ்வாறு தமிழர் நடவடிக்கைக் குழு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் இரட்ணசிறி விக்கிரமநாயக்க, நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகியோருக்கு தமிழர் நடவடிக்கைக்குழுத் தலைவர் என் ஜெயசிங்கம் அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

தமிழ்மொழி அமுலாக்கலை சகல மட்டங்களிலும் நடைமுறையாக்கும் வகையில் மேலதிகமாக 30 சத வீதமானவர்களை அரச சேவைகளுக்கு சேர்த்துக் கொள்ள வேண்டும் என இணங்கப்பட்டது.

இதன் மூலம் 30 சத வீதமான தமிழர்கள் அரசாங்க சேவைக்கு உள்வாங்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போதைய நிலைமை என்ன?

1988 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் திகதி பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கை இலக்கம் 28/97 ஐ அமுல்படுத்துவதற்கு அரசாங்க திணைக்களங்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சகல அமைச்சுச் செயலாளர்களும் அரசாங்க அதிகாரிகளும் திணைக்களங்களின் தலைவர்களும் அரசின் தமிழ்மொழி அமுலாக்கல் தொடர்பான சுற்றறிக்கையை பாராமுகமாக இருந்து புறக்கணித்து வருவது எமக்கு மிகக் கவலையை அளிக்கின்றது.

இந்த தமிழ்மொழி அமுலாக்கல் கொள்கைகளின் பிரகாரம் மேலதிக தமிழ் அதிகாரிகளை அரசாங்க சேவைக்கு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதும் ஒரு கட்டாயமாகும்.

ஆகவே இந்த நிலைமையில் தமிழ் மொழி அமுலாக்கல் சுற்றறிக்கையை எவ்வாறு அமுல்படுத்தப் போகிறீர்கள் என்து புரியவில்லை. அரசமைப்புத் திட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்ட போதும் அதை அமுல்படுத்துமளவுக்கு அரசாங்கத்திடம் அரசியல் விருப்பம் தென்படவில்லை. தமிழருக்கு இன்னமும் சிங்களத்திலேயே கடிதங்கள் வருகின்றன. இது தமிழ் மக்களுக்கு பல வசதியீனங்களை ஏற்படுத்துவதோடு அவமதிப்பாகவும் படுகின்றது.

இது போதாதென்று பல இடங்களில் தமிழில் பெயர்ப் பலகைகளும் காணப்படுவதில்லை.

நாங்கள் அண்மையில் மேற்கொண்ட ஆய்வுகளின் பிரகாரம் 400 ஊழியர்கள் கடமையாற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் தமிழ் பேசும் அதிகாரிகள் ஆறு பேரே கடமையாற்றுகின்றனர்.

தினமும் பெருமளவிலான தமிழர்களுடன் அன்றாட அலுவல்களில் ஈடுபடும் இத் திணைக்களத்தின் நிலைமை இவ்வாறு இருப்பின் ஏனைய அரசாங்கத் திணைக்களங்களின் நிலைமை குறித்துத் தெரிவிக்க வேண்டியதில்லை.

தமிழ் மக்கள் தமது அன்றாட அலுவல்களை சிங்களத்திலேயோ அல்லது ஆங்கிலத்திலேயோ மேற்கொள்கின்றார்கள். இதற்கு மொழிபெயர்ப்பாளர்களின் உதவியை பணச்செலவு செய்து பெற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கின்றது.

இது தமிழ் மக்களின் அடிப்படை உரிமையை மீறுவதோடு பாரபட்சம் காட்டுவதாகவும் அமைகின்றது என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆகவே தமிழ் மொழி அமுலாக்கல் தொடர்பாக பதினொரு வருட கால தாமதத்தின் பின்னர் கூட நீங்கள் எடுக்க உள்ள நடவடிக்கை என்ன என்பதைத் தெரியப் படுத்துவீர்களா?—

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ரீ-10)

# நாவலர் குருபூசை நிகழ்வுகள்

வலிகாமம்தெற்கு, டிசெ. 8

உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் நாவலர் விழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தில் இடம்பெற உள்ளது.

உடுவில் சிவஞானப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து நாவலரின் திருவுருவப்படம் நாதகானத்துடன் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு எடுத்து வரப்படும்.

மன்றத்தின் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன் பிரதம விருந்தினராகவும் —

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய இளைப்பாறிய அதிபர் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் சிறப்பு விருந்தினராகவும் — பங்குபற்றுவர். (இ-152)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ. 8

யாழ். இந்துக் கல்லூரியில் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆறுமுகநாவலர் குருபூசை நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் க. சிவராமலிங்கம் விசேட சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஐ-7)

★ ★ ★

யாழ்ப்பாணம், டிசெ. 8

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் குருபூசை நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் கௌரவ கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் பண்ணிசையும், யாழ். பல்கலைக்கழக பதில் தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி சி. சிவலிங்கராஜாவின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்.

நண்பகல் 12.30 மணிக்கு மகேஸ்வர பூசை நடைபெறும். (இ-30)

★ ★ ★

யாழ். சைவ பரிபாலன சபை நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் குருபூசை நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும். (இ-8)

★ ★ ★

யாழ்.இந்து சமயப்பேரவை ஆறுமுக நாவலர் மணி மன்றத்துடன் இணைந்து நடத்தும் ஆறுமுக நாவலர் குருபூசை நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அருட்கவி. சீ. விநாசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

விசேட நிகழ்வாக கவிஞர் இ. முருகையன் தலைமையில் கவியரங்கம் இடம்பெறும். (இ-8-30)

★ ★ ★

யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நாளை புதன்கிழமை காலை 10 மணி முதல் ஆறுமுக நாவலர் குருபூசை நடைபெறவிருக்கின்றது.

பாடசாலை அதிபர் ஐ. துரைராஜாவின் தலைமையில் பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் பண்ணிசை, சிறப்புச் சொற்பொழிவு, மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் என்பன இடம் பெறும். (இ-6)

★ ★ ★

அகிலஇலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் நாவலர் பெருமானின் குரு பூசை தின நிகழ்வுகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளன.

சிறப்பு நிகழ்வுகளாக திருமுறைப்பாராயணமும், சொற்பொழிவு என்பன இடம்பெறும். (இ-8)

கொழும்புத்துறை, டிசெ 8

கோண்டாவில் அருள்மிகு அரசடி ஆசிமடம் விநாயகர் ஆலயத்தின் மூலமூர்த்திக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும், இராஜ கோபுரத்துக்குமான மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

மகாகும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக்கிரியைகள் நேற்று முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (ஐ-30)

# விஞ்ஞான கண்காட்சி இன்று ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட விஞ்ஞானக் கண்காட்சியைஇன்று காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைப்பார்.

யாழ். பல்கலைக்கழக இரசாயனபீடத்தில் நடைபெறும் இக் கண்காட்சி இன்றும் நாளையும் நாளைமறுதினமும் நடைபெறும்.

இந்தகண்காட்சி மாணவர்களுக்குரிய பாடவிதானத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தெரிவித்தார்.

மாணவர்களுக்கென ஒதுக்கப்பட்ட நாளில் வருகைதந்து மாணவர்கள் கண்காட்சியை பார்வையிடுமாறு தெரிவித்த அவர் தேவையேற்படும் பட்சத்தில் கண்காட்சியை பார்வையிடும் தினங்கள் மேலும் நீடிக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ஐ-5)

# பண்ணிசைப் போட்டி

யாழ்ப்பாணம், டிசெ. 8

தொண்டமனாறு சந்நிதியான ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை எதிர்வரும் 27 ஆம் திகதி நடத்தவுள்ள திருவாசக விழாவை முன்னிட்டு பண்ணிசைப் போட்டி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் தமது சுயவிவரத்துடனும், அதிபரின் உறுதிப்படுத்தலுடனும் எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை மேற்படி பேரவையில் ஒப்படைக்கவேண்டும்.

ஆண்டு 6, 7 மாணவர்களுக்கு சிவபுராணமும், ஆண்டு 8, 9 மாணவர்களுக்கு அச்சோப்பதிகமும், ஆண்டு 10, 11 மாணவர்களுக்கு திருவெம்பாவையும், ஆண்டு 12, 13 மாணவர்களுக்கு அற்புதப் பத்தும் பண்ணிசைக்கான பாடல்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி போட்டிகள் நடத்தப்பட்டு திருவாசக விழாவில் பரிசில்கள் வழங்கப்படும். (இ-8-30)

# மாதாந்த இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், டிசெ. 8

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறை கவின்கலை மன்றத்தின் மாதாந்த இசைநிகழ்ச்சி நாளை புதன்கிழமை நுண்கலைத்துறை மண்டபத்தில் நடைபெறும்.

நண்பகல் 12. 30 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்ச்சியில் செல்வி சிவப்பிரியா வைரமுத்து, கே. இராமநாதன் ஆகியோரின் இசைக் கச்சேரிகள் நடைபெறும். (ஐ-9)

# தாவடியில் 50 பேருக்கு சுயதொழில் முயற்சி கடன்

வலிகாமம் தெற்கு, டிசெ.8

அகதிகளுக்கான ஐ. நா. ஆதரகத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் சுய தொழில் முயற்சியில் ஈடுபட இருக்கும் தாவடி கிராமத்தைச் சேர்ந்த ஐம்பது பயனாளிகளுக்கு தலா பத்தாயிரம் ரூபா கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

விவசாய முயற்சி, சிறு வியாபார முயற்சி, பசுமாடு வளர்த்தல், ஆடு வளர்த்தல் தையற் பயிற்சி போன்ற பல தொழில் முயற்சிகளைத் தொடங்குவதற்கு உதவும் நோக்குடன் இக் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

தாவடி தெற்கு, தாவடி வடக்கு கிராம முன்னேற்றச் சங்கங்களினூடாக இந்நக் கடன் வழங்கப்பட்டது.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் ஐம்பது பயனாளிகளுக்கும் தலா பத்தாயிரம் ரூபா வீதம் ஐந்து லட்சம் ரூபாவினைக் கையளித்தார். (இ-152)

# தையல் கண்காட்சி

நல்லூர், டிசெ. 8

யாழ்ப்பாணம் கல்வி வலயம் ஒன்றின் முறைசாராக் கல்விப்பிரிவு நடத்தும் தையல் கண்காட்சி திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் நாளை புதன் கிழமை காலை 11-00 மணிக்குத் திறந்து வைக்கப்படும்.

நல்லூர் பிரதேச செயலர் எஸ். வேல்முருகோன்பிள்ளை மங்கள விளக்கேற்ற வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம் பிள்ளை கண்காட்சியைத் திறந்து வைப்பார். (ஐ-103)

# விபத்தில் காயம்

கோண்டாவிலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

மோட்டார்சைக்கிளை ஓட்டிச்சென்றவரும் கோண்டாவில் களஞ்சிய எழுதுநருமான மாதகலைச் சேர்ந்த திருநாவுக்கரசு கணேஸ்வரன் (வயது 24) என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நம!

அன்பர்களுக்கு ஒரு நற்செய்தி!

மல்லாகம்

கே. கே. எஸ். வீதியில்

(பெற்றோல் நிரப்பு நிலையம் முன்பாக)

உள்ளூர் / சர்வதேச நேரடி

தொலைத் தொடர்பு நிலையம்

(பதிவு செய்யப்பட்டது)

T. N. COMPLEX AND COMMUNICATION CENTRE

K. K. S. வீதி, மல்லாகம்.

FOR LOCAL - I. D D CALLS

T.P. NO: உள்நாடு — 070—212338

வெளிநாடு — 0094—070—212338

(61181)



புதிய பிரிவு

புலமைப் பரிசில் வகுப்புகள்

ஆரம்பம்: 12 - 12 - 98

Sat. 8 a. m.

★ ஒவ்வொரு வகுப்புக்கும் முதல் 25 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

★ அனுமதிகளை முன் கூட்டியே பெறவும்.

BOND - யாழ் நகர்.

(61185)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு விற்பனை நிலையங்களில் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 8

யாழ். கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு கொழும்பிலிருந்து பொருள்கள் வந்துசேராமையினால் அதன் வாடிக்கையாளருக்கு அத்தியாவசிய பொருள்களை வழங்க முடியாமலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் 4 இடங்களில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் கிளைகள் இயங்கி வருகின்றன.

சுண்டுக்குளி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் வீதி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் இயங்கிவரும் கிளைகள் விற்பனைக்கு பொருள்களின்றி வெறிச்சோடிப்போயிருக்கின்றன.

அத்தியாவசியப் பொருள்களான அரிசி, சீனி, பலசரக்கு வகைகள், பால்மா உட்பட பல பொருள்கள் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களினால் கட்டுப்பாட்டு விலையில் விநியோகம் செய்யப்பட்டு வந்தன.

அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்வதற்காக தினமும் இக் கிளைகளுக்குச்செல்லும் வாடிக்கையாளர்கள் பொருள்கள் எதுவுமின்றி ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

எதிர்வரும் நத்தார், தைப் பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டாவது இக் கிளைகளுக்குப் பொருள்கள் வந்து சேராதா? என்று வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கின்றனர். (ஐ-5-30)

## மரு அகதி...

(முதலாம் பக்கத் தொடர்)

தங்கியிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

போதிய உணவு இன்றி தினமும் பிள்ளைகள் அழுவது கண்டு பொறுக்க முடியாமல் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக இவர் அடிக்கடி கூறிவந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர்.

கடந்த புதனன்றும் அவ்வாறுபிள்ளைகள் பசியால் அழுவதைக் கண்டதும் இவர் குப்பி விளக்கில் இருந்த மண்ணெண்ணெயை உடலில் ஊற்றித் தீமூட்டியதாகக் கூறப்படுகிறது,

உடல் பூராவும் பலத்த எரிகாயங்களுடன் ஆபத்தான கட்டத்தில் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் நேற்று முன்தினம் அங்கு உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரது மரணவிசாரணை அங்கு நடைபெற்றது. (ஐ-10-21)


ஆசிரியர்களுக்கான
ஊக்குவிப்புக் கொடுப்பனவுப் படிவம்

ஆசிரியர்களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் 1997, 1998 ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குவதற்கான விவரப் படிவம் விற்பனையாகின்றது.

பாரதி பதிப்பகம்
430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(61191)



எடிசன் அக்கடமி

யாழ். இந்து அருகில்
411, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை நிலையம்
20, வைமன் றோட்,
நல்லூர்.

கல்வியாண்டு - 1999

ஆண்டு 6 முதல் O/L வரையான வகுப்புகள்

| | |
|---|---|
| கணிதம்: | B. P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம்: | இரா. செல்வவடிவேல், P. சிவானந்தராஜா |
| சமூகக்கல்வி: | உங்கள் ஆசிரியர், S. ஜெயா, S. கதிர்காமத்தம்பி |
| தமிழ்: | S. கதிர்காமத்தம்பி; பண்டிதர் |
| ஆங்கிலம்: | S. சந்திரமௌலி, S.சோமசுந்தரம் S. A. கேசரி |
| சுகாதாரம்: | P. சிவானந்தராஜா |
| வர்த்தகம்: | T. அரவிந்தன், E. ஜீவா |
| ஆங்கில இலக்கியம்: | K. சுப்பிரமணியம் |

ஆரம்பம்: 09 - 12 - 98
புதன் பி. ப. 4-15 மணி.
(61192)


## பிரதி...

(முதலாம் பக்கத் தொடர்)

ஐ. தே. கட்சியின் சார்பில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் காமினி ஜயவிக்கிரம பெரேரா மற்றும் உறுப்பினர் அசோக வடிகமங்கள ஆகியோரே இராஜினாமாச் செய்த இரு எம். பிக்களுமாவர். (உ-9-10)

## வன்னியில் ..

(முதலாம் பக்கத் தொடர்)

ஈ.பி.டி.பி மற்றும் தமிழ்க் கட்சிகள் வன்னி மக்களுக்கான நிவாரணம் வெட்டப்பட்டது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை நேரில் சந்தித்து ஆட்சேபம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-164-9)

## சாவகச்சேரி...

(முதலாம் பக்கத் தொடர்)

கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏரம்பு கமலேஸ்வரன் (வயது 22— நாகம்மாள் கோயிலடி, சீரணி, சண்டிலிப்பாய்) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

இவர் உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக் கைதுகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-7-5)

## முல்லை மாவட்டத்தில்

# ஜி. சீ. ஈ. பரீட்சையை சுமுகமாக நடத்த ஏற்பாடு

வவுனியா, டிசெ. 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை நிலையங்கள் அமையவுள்ள பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துவதற்கு வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாக முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

ஒட்டுசுட்டான் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து சென்ற மக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல பாடசாலைகளில் தங்கியுள்ளனர். அந்தப் பாடசாலைகள் சிலவற்றில் ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சை நிலையங்கள் அமைய உள்ளன. எனவே பரீட்சைகளை நடத்தும் நோக்கில் அந்தப் பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துவதற்கு தாம் முயற்சி எடுத்து வருவதாகவும் —

இதற்கு உதவியாக 500 கூரை விரிப்புக்களை தந்துதவுமாறு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தை தாம்கேட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-9)

## ஒட்டுசுட்டானில்

# இடம்பெயர்ந்தோருக்கு 7 நாள் சமைத்த உணவு

வவுனியா, டிசெ. 8

ஒட்டுசுட்டான் பகுதியில் இருந்தும், மன்னாகண்டல் பகுதியில் இருந்தும் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு நேற்று முதல் ஏழு நாள்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது

இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்களுக்கு மூன்று நாள்களுக்குத் தேவையான சமைத்த உணவே தம்மால் வழங்க முடியும் என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அறிவித்திருந்தது.

தற்போது முல்லைத்தீவு அரச அதிபர் ஏழு நாள்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்களை வழங்குவதற்குச் சம்மதித்ததனை அடுத்தே புனர்வாழ்வுக் கழகம் 7 நாள்களுக்கு சமைத்த உணவை வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## பேராதனை பல்கலைக்கழக

# வெளிவாரிப் பரீட்சை 16 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 8

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பரீட்சைகள் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும் என்று அந்தப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பிரிவு பேராசிரியர் வி. நந்தகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மாணவர்களின் நலன் கருதி இப்பரீட்சைகள் 16ஆம் திகதி முதல் இங்கு நடைபெறும் எனவும் —

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளைத் தாம் 15 ஆம் திகதி இங்கு எடுத்து வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பரீட்சைகளுக்குரிய நேர அட்டவணை வருமாறு—

★ 16 ஆம் திகதி — இந்து நாகரிகம் — I, II

★ 17ஆம் திகதி — காலை; இந்துநாகரிகம் — III, மாலை தமிழ் I

★ 18 ஆம் திகதி — தமிழ் — II, III

★ 20 ஆம் திகதி —மாலை மெய்யியல் — II

★ 21 ஆம் திகதி — புவியியல் — I, II

★ 22 ஆம் திகதி — காலை புவியியல் — iv, மாலை பொருளியல் — I

★ 23ஆம் திகதி — பொருளியல் — II, III

★ 26 ஆம் திகதி — மெய்யியல் — I

★ 28 ஆம் திகதி — மெய்யியல் — iv

★ 29 ஆம் திகதி — அரசியல் — I, II

★ 30 ஆம் திகதி — காலை அரசியல் — III, மாலை மெய்யியல் — III

★ 31ஆம்திகதி— புவியியல் — III

(ஐ-9)

## விபத்தில் பெண் படுகாயம்

நெல்லியடி டிசெ. 8

வயலில் வேலை முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்த வயோதிபப் பெண் ஒருவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி ஆபத்தான நிலையில் யாழ். போதனா மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

நேற்று மாலை 3 மணியளவில் வல்லைச்சந்திக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

உடுப்பிட்டி இமையாணன் கிழக்கைச் சேர்ந்த அப்புக்குட்டி-அம்மா (வயது 62) என்பவரே தலையில் பலத்த காயத்துடனும் இடது கால் முறிந்த நிலையிலும் மந்திகை மருத்துவ மனையிலிருந்து யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ஐ-109)


BITSMANS INSTITUTES
MANIPAY

கல்வி ஆண்டு 99 | ஆண்டு 1 முதல் O/L வரை

"Super Grade" ஆசிரியர் குழுவினால் கற்பிக்கப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| ★ கணிதம் ★ இரா. அருட்செல்வம் சிவா | ★ விஞ்ஞானம் ★ N. தேவா தீபன், முகுந்தன் | ★ வர்த்தகம் ★ N. ராஜன் | ★ தமிழ், சமயம் ★ பாலா, தர்மா |
| ★ வரலாறும் சமூ. கல்வியும் ★ N. ராஜன் கணேஷ் | ★ ஆங்கிலம், ஆங். இலக்கியம் ★ தெய்வதவபாலன் இருபாகரன், M.A. Hari | ஆரம்பம்: 09 - 12 - 1998 புதன்கிழமை மாலை 4.00 மணி | |

குறிப்பு; மாணவர் தொகை வரையறுக்கப்பட்டிருப்பதால் அனுமதிக்கு முந்துங்கள். (61171)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361, ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08 - 12 - 98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.